உ

# அறம் வளர் இளந்தமிழ்



★ உண்மையே கடவுள் ★

✳ உடலுழைப்பு ✳ சிக்கனம் ✳ சமத்துவம் ✳

சாதி, சமய, இன வேற்றுமையற்ற
சிறுவர்களுக்கான சஞ்சிகை.



தைபிறந்தால் வழி பிறக்கும் வாழ்வு சிறக்கும்
கைநிறைய பொருளீட்டி உள்ளம் சிரிக்கும்
புதுயுகத்தில் புது நினைவு நாளும் பிறக்கும்
அதுவே எமை நிதம் தாலாட்டி வளர்க்கும்.

**வாசக நெஞ்சங்களுக்கு எமது**

**பொங்கல் வாழ்த்துக்கள்!**

ஒளி: 3    15-01-1994    சுடர்: 2

சிறுவர்களுக்கான காலாண்டு சஞ்சிகை

விநாயகர் தரும நிதிய இலவச வெளியீடு

பிரதிகள்: 2100
முடிவு விலை: 8/40
பக்கங்கள்: 36

உ

சிவமயம்

# சமர்ப்பணம்



இம் மாநிலம் உருவாகி அதில் உயிரினங்கள் உருவாக தங்கள் சக்தியை எந்நேரமும் உதவிக் கொண்டிருக்கும் ஐந்து பூதங்களான காற்று, தீ, நீர், நிலம், ஆகாயம் இவற்றிற்கும் எம்மை உருவாக்கிய தந்தை, தாய், குரு முதலானோருக்கும் நாம் வாழ உணவு அளித்துக் கொண்டிருக்கும் தாவர வர்க்கம் முதல் மனிதகுலம் வரையான சகல சீவராசிகட்கும் எமது வணக்கத்தைச் செலுத்தி இவர்கள் பாதார கமலங்கட்கு இந் நூலைச் சமர்ப்பணம் செய்வதில் பூரண ஆத்ம திருப்தி அடைகிறோம்.

— நிறுவனர்.

விநாயகர் தரும நிதியம்
15-01-94.

## இதழின் உள்ளே......


* எண்ணங்கள்
* தேசாபிமானி 1993
* குறளின் கூற்று
* அறிவியல் அரங்கு
* மூளைக்கு வேலை
* புதிர்
* அறிந்து கொள்ளுங்கள்
* நொடியும் விடையும்
* கண்ணீர் சிந்தும் ஹிரோஷிமா
* வெல்லக்கட்டி - கவிதை
* விண்வெளி காண்போம்
* சிறுகதைகள்
* மாணவர்களுக்கு ஓர் அறிவுரை
* சிந்தனைக்குச் சில சத்தான முத்துக்கள்
* நிறுவனரின் சிந்தனை.



மேற்பார்வை - ஆலோசனை
நெறிப்படுத்தல்
திரு. ஆ. சி. முருகுப்பிள்ளை

ஆசிரியர்கள்:
வ. ச. செல்வராசா
சு. ஸ்ரீகுமரன்

அச்சமைப்பு:
விநாயகர் தரும நிதிய
அச்சகம்

கடிதத் தொடர்பு;
நிறுவனர்
விநாயகர் தரும நிதியம்
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.


மாணவ நெஞ்சங்களே!
உங்களது கருத்துக்களையும் ஆக்கங்களையும் அன்போடு எதிர்பார்க்கின்றோம்.

ஸ—

# எண்ணங்கள்

மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் வையத்துள் வாழ்வாங்கு வாழ அறநெறியே உறுதுணையாகவும் ஊன்று கோலாகவும் அமைகின்றது. அறநெறியில் நின்று ஒருவர் விலகும் பொழுது அவருக்கும் விலங்குக்கும் எவ்வித வேறுபாடும் இல்லாது போய்விடுகின்றது. அறநெறி வாழ்வும் அதன் பண்பாடும் மனிதனை மனிதனாக வாழ வழிகாட்டி அவனை நேரியபாதைக்கு அழைத்துச் சென்று அவன் உயர்விற்கு அத்திவாரமிடுகின்றது என்றால் மிகையாகாது.

அன்றைய முன்னோர்கள் இட்ட அறநெறி அத்திவாரம்தான் இன்றுவரை தமிழினம் முற்றாய் அழிந்து போகாது தனித்துவத்துடனும் தன்மானத்துடனும் தலைநிமிர்ந்து நிற்க பெரும் பங்கு பணியாற்றியுள்ளது என்பது மறக்க முடியாத உண்மையாகும். இதன் அடிப்படைத் தேவைகளை உணர்ந்தமையினால்தான் ஔவையார் அருளிய ஆத்திசூடி – கொன்றைவேந்தன் – வாக்குண்டாம் – நல்வழி ஆகியவைகளை அறநெறிச் சிந்தனை என்று தொகுத்து மாணவ மணிகளின் விசாலமான விரிவான சிந்தனை வளர்ச்சிக்கு நல்ல பாதைகளைச் செப்பனிட முனைந்துள்ளோம்.

இவைகளோடு எமது நிறுவனரின் பணிகள் ஓயவில்லை. திருக்குறளையும் தொகுத்து அறநெறியை வளர்க்க ஆர்வமுடன் வெளியிட்டுள்ளார். இந்நூல்களை வெளியிட்டுவைத்த அவர் பின்வருமாறு தமது விசாலமான மன எண்ணங்களை விளம்பியுள்ளார்.

இருபதாம் நூற்றாண்டில் மனனம் செய்யும் பழக்கம் அருகி வருவதால் நம்முன்னோர்களின் அறநெறிச் செல்வங்களை இளைய தலைமுறையினர் சிறிது சிறிதாய் இழந்து வருகின்றனர். இந்நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது. இந் அறநெறிச் செல்வங்களை இழப்பது போன்ற பேரிழப்பு வேறு இல்லை எனத் துணிந்து கூறலாம். இத் தமிழ் மொழியிலுள்ள அறநெறிகளை நாம் மறந்து விட்டோமானால் நாம் தமிழர் என்றுகூறி வாதம் செய்வதில் எவ்வித பயனுமில்லை. எனவே எமது குழந்தைகளிடையே மனனம் செய்யும் பழக்கத்தை மீண்டும் கொண்டு வருதல் எமது தலையாய கடமையாகிறது. என்று தமது எண்ணக் கருத்தை முன்வைத்துள்ளார்.

இவைகளோடு தமது பணியை நிறுத்தாது இளம் சிறார்கள் எழுத்தை உறுப்பெழுத்தாக்கும் முயற்சியில் தம்மை அர்ப்பணித்து அதற்கான ஆய்த்தங்களை 1993 சித்திரையில் ஆரம்பித்து வசன அமைப்புகளை வடிவமைத்து அதற்கான ,பிளக்' தயாரிப்பதில் ஏற்பட்ட சுணக்கம் காரணமாக 1993 ஐப்பசியிலேதான் இப்பணி நிறை

வெய்தியது. இவ் உறுப்பெழுத்துக் கொப்பிகளை பல பாடசாலைகளும் ஆர்வமுடனும் அக்கறையுடனும் வேண்டி எமது பணிகளுக்கு ஆதரவுக்கரம் நீட்டினர்.

இவ் எண்ணத்திற்கு ஏற்ப இன்று பல மாணவர்களின் எழுத்துக்கள் உறுப்பில்லாதமையினால் அரசினர் எழுத்தை அழகாகவும் தெளிவாகவும் எழுதும் மாண்வர்களுக்கு போட்டிப் பரீட்சைகளிலும் பொதுப் பரீட்சைகளிலும் கூடிய புள்ளிகளை வழங்கும் எண்ணத்தை வெளியிட்டுள்ளனர். எமது நிறுவனரின் தீர்க்க தரிசனமான இம் முயற்சியை பலரும் பாராட்டி கடிதம் எழுதுகின்றனர் – நேரில் வருகின்றனர் கையிருப்பில் உள்ள எழுத்துறுப்புக் கொப்பிகள் முழுவதும் முடிவடைந்தும் விட்டன. இவ்வகையான நேர்த்தியான நிதானமான – தீர்க்கதரிசனமான எமது நிறுவனரின் செயற்பாடு இளம் மாணவர்களின் கல்வியையும் அவர்களின் எதிர்காலத்தையும சிறப்பாகவும் – செம்மையாகவும் வாழ வளர வழிகாட்டிய வண்ணமே உள்ளது.

அவரின் மேற்பார்வையிலும் – ஆர்வத்திலும் – ஆ லோ ச னை யிலும்தான் இந்த இழந்தமிழ் உங்கள் கைகளில் மலர்ந்து மணம் பரப்புகின்றது. தான் கல்வி கற்ற காலத்தில் புத்தகம் வாங்க வழியில்லாதவனாய் வசதியில்லாதவனாய் இருந்து அறநெறியைப் பேணிக் காத்து அதன்படி செயற்பட்டமையினால்தான் படிப்படியாய் வளர்ந்து உங்கள் கைகளில் இந்நூல்களை இலவசமாகத் தர முடிகின்றது என பெருமையுடனும் – தன்னம்பிக்கையுடனும் தன் மனம் திறந்து கூறியும் உள்ளார்.

எனவே மாணவர்களாகிய நீங்களும் சிக்கனத்தைக் கடைப்பிடித்து சமத்துவத்தைப் பேணி உடலுழைப்பை நல்கி ஒரு புதிய அறநெறிச் சமுதாயம் மலர புத்தாண்டில் புதிய சங்கர்ப்பம் செய்வீர்கள் என வேண்டுவதோடு இதையே உங்கள் முன் உள்ள பெரும் பணியாக நினைத்து செயல்பெறுமாறு இருகரம் கூப்பி வேண்டுகின்றோம்.

உழைப்பே உயர்வு தரும்
உண்மையே பெருமை தரும்.

— ஆசிரியர் —

---

மிகவும் சிறிய தேசிய கீதம் யப்பான் நாட்டினுடையது. இது நான்கு வரிகளை மட்டுமே கொண்டது. கிரேக்க நாட்டின் தேசிய கீதம் மிகவும் நீளமானது. இது 128 வரிகளாலானது.

தமிழ்த்தாய் மன்றத்தின் மாற்றம் சஞ்சிகையின்
சிந்தனை வளர்ச்சியை மனப்பூர்வமாக
வரவேற்பதோடு அவர்கள் சேவை
மென்மேலும் வளர
வாழ்த்துகின்றோம்.

எமது நிறுவனர் அவர்களுக்கு மாற்றம் சஞ்சிகையினர் 1993-ம் ஆண்டுக்கான தேசாபிமானி விருது வழங்கிக் கௌரவித்துள்ளார்கள். அவர்கள் வழங்கிய கௌரவத்தை மனநிறைவோடு ஏற்றுக் கொள்வதோடு அவர்கள் இவ்விருது சம்பந்தமாக மாற்றம் சஞ்சிகையில், தேசாபிமானி 1993 என்ற தலைப்பில் வெளியிட்ட எண்ணக் கருத்தைக் கீழ்த்தருகின்றோம்.

# தேசாபிமானி 1993

போர்க்காலச் சூழ்நிலையில் இந்த மண்ணை விட்டோடாது மண்ணையே நேசித்து இருக்கின்றவர்கள் எல்லோரும் தேசாபிமானிகள் தான். ஆனால் ஏனைய மக்களுக்கு முன்னுதாரணமாக பணியாற்றுகின்ற ஒவ்வொரு மனிதரும் உன்னதமானவர். இவர்கள் 'தேசாபிமானி'களாகக் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள்.

இந்த வகையில் எமக்குக் கிடைக்கப்பெற்ற ஆதரவுச் சீட்டுக்களின்படி திரு. ஆ. சி. முருகுப்பிள்ளை (விநாயகர் தரும நிதியம்), திரு. க. மாணிக்கவாசகர் (அரசாங்க அதிபர்), திரு. இ. மகேந்திரன் (அதிபர்), கலாநிதி க. கனகராசா, துணைவேந்தர் அ. துரைராஜா, துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி என்போர் இந்த ஆண்டுக்கான தேசாபிமானியாக மக்களால் விதப்புரை செய்யப்பட்டார்கள்

இவர்களின் விதப்புரைகளின்படி அதிகமான ஆதரவுச் சீட்டுக்களைப்பெற்று எமது மன்றத்தின் பெறுமதிமிக்க 1993-ம் ஆண்டிற்கான தேசாபிமானி விருதைப்பெற்றுக் கௌரவிக்கப்படவுள்ளவர் உயர்திரு. ஆ. சி. முருகுப்பிள்ளை அவர்கள்.

தேசாபிமானி விருது

விருதின் பெறுமதியையோ, வேறு எந்த அளவுகோல்களாலோ கொண்டு விருதினை மதிப்பீடு செய்யலாகாது. இந்த விருது எதற்காக, ஏன், யாரால், யாருக்கு வழங்கப்பட்டது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

இவர் இந்த மண்ணையும், மக்களையும் நேசிப்பவர். மக்கள் பணியே மகேசன் பணி என வாழ்ந்து கொண்டிருப்பவர். ஏழைகளைக் காதலிக்கும் எளிமையான மனிதர். ஏழைகள், இடம்பெயர்ந்தவர்கள், ஊனமுற்றவர்கள் போன்றவர்களுக்கு பல்வேறு உதவிகள் புரிந்து ஆதரிப்பவர். இலவசமாக நூல்கள், சஞ்சிகைகள், வெளியிட்டு விநியோகிப்பவர்; அறநெறிச் சிந்தனையில் அறம் வளர்ப்பவர்; பெரும் கொடையாளர். இவரது பணிகளை எழுதத் தொடங்கினால் விரிந்து கொண்டே போகும். இவ்வாறான ஒருவருக்கு எமது மன்றத்தின் 'தேசாபிமானி 93' விருது கொடுப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறோம்.

இதேவேளை பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலும் மக்களின் நலன் கருதி உழைக்கின்ற, இந்த நாட்டை நேசிக்கின்ற அனைத்துத் தேச அபிமானிகளையும் நன்றி உணர்வுடன் வாழ்த்துகின்றோம்.

10-12-1993 — தமிழ்த்தாய் மன்றம்.

நன்றி: ''மாற்றம்''

## நாம் வாழ்த்துகின்றோம்

இந்து இளைஞர் பேரவை கௌரவ செயலாளர் திரு. சி. சி. வரதராசா அவர்கள் எமது நிதியத்தோடு இணைந்து நாம் வெளியிடும் இலவச வெளியீடுகளை எல்லாம் சகலரும் பயன்பெறும் விதமாக விநியோகித்து, விநியோகித்ததற்கான பட்டியல்களையெல்லாம் தயாரித்து எமக்கு அனுப்பி வைப்பதோடு, வாசக நேயர்களின் பாராட்டுக் கடிதங்களையெல்லாம் தொகுத்து அனுப்பி வைத்து எமது நோக்கத்தை நிறைவேற்ற அயராது உழைத்துவரும் அன்பர் திரு. சி. சி. வரதராசாவை மனமார வாழ்த்துகின்றோம் - அவரின் சேவை உள்ளத்தை வரவேற்கின்றோம்.

— நிறுவனர் —

★ கல்வி இல்லாத ஆன்மா
பணி செய்யாத சலவைக்கல்.

- எடிசன்.

★ கல்வியின் இலட்சியம் மதிப்பெண் அல்ல,
அறிவு நலம்பெறுவதே ஆகும்.

- அறிஞர் அண்ணா.

ஏ—

# குறளின் கூற்று

—குமரன்—



அறிவு என்பது என்ன? அறிவது அறிவு. அப்படியானால் அந்த அறிவுக்கு எல்லை ஏது? நாம் ஒன்றைப்பற்றி அறிகிறோம். அதுபற்றி அறிய அறிய அது நீண்டு செல்கிறது. முடிவில்லாது தொடர்ந்து செல்கிறது. அதிலிருந்து மேலும் மேலும் புதிய விடயங்கள் ஊற்றெடுக்கின்றது. புதியன புதியனவாயே எல்லாமே தோன்றுகிறது. அவ்வாறு தோன்றித் தோன்றி முடிவற்று அது செல்கிறது. அப்படியானால் அறிவு முடிவிலியா? ஆம்!

அறிவை நாம் முழுமையாகப் பெற்றுவிட முடியாது. இந்த அறிவை நாம் கற்றலின் மூலம் பெறுகிறோம் என்று கூறலாமா? நாம் இயற்கையிலிருந்து கற்கிறோம். அது அறிவு. அனுபவத்திலிருந்து கற்கிறோம். அதுவும் அறிவு. நூல்களிலிருந்து கற்கிறோம் அதுவும் அறிவு. இவ்வாறு நாம் நம்மைச் சுற்றியே கற்கிறோம். நம்மிலிருந்தே கற்கிறோம்.

ஒரு பழமொழி சொல்வார்கள். கடலை, வானை அளந்தாலும் ஒரு மனிதனை அளந்து விடமுடியாது. இதுவே எதற்கும் பொருந்தும். விஞ்ஞானம் வளர்ந்து கொண்டே போகிறது. ஆனால் அது தெளிய வைக்க வேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன. இந்த அறிவு எல்லையற்றது.; இந்தப் பிரபஞ்சம் போல!

அவ்வாறிருக்கும் போது அறிவுள்ளவன் அறிவற்றவன் என்று கூறுகிறார்கள். வள்ளுவரே அதனை தனது குறளில் சுட்டுகிறார். இதற்கென, குறளின் 43வது அதிகாரம் 'அறிவுடைமை' என உருவாக்கப்பட்டுள்ளது. இதில் வள்ளுவப் பெருந்தகை சொல்கிறார்,

''அறிவுடையார் எல்லாமுடையார் அறிவிலார்
என்னுடையரேனும் இலர்'' என்று

அறிவுள்ளவர் எல்லாமுடையவர்கள். அவர்களிடம் உள்ள அறிவினால் அவர்கள் தம்மிடம் எல்லாவற்றையும் கொண்டவர்களாக விளங்குகிறார்கள். அறிவு இருந்தால்த்தான் ஒரு பொருளை ஆக்க முடியும் அறிவு இல்லாவிடில் ஒன்றுமில்லை. அறிவில்லர்தவரிடம் என்னதான் இருப்பினும் ஒன்றுமில்லாத தன்மையே காணப்படும் என்று இங்கு வள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

ஒன்று சொல்வார்கள் 'அறிவு வேண்டும் சேமிப்பதற்கு மட்டு

மல்ல அதனைப் பாதுகாப்பதற்கும்' என்று. எனவே, எதற்கும் அறிவு அவசியமானது. அறியாமை, அறிய விரும்பாமை என்று இரண்டு பதங்கள் உள்ளன. இதில் அறியாமை என்பது முன்கூட்டி அறிந்திராத தன்மையைச் சுட்டுகிறது. எனவே, அறியாமையை நீக்கி, எதைப் பற்றியும் அறிந்து வைத்திருக்கும் தன்மை பெற்றிருக்க வேண்டும், அவ்வாறான தன்மையின் உச்சமே அவனை 'அறிவாளி' என்று சொல்ல வைக்கும்.

அறிய விரும்பாமை என்பது ஒன்றைப் பற்றி அறிவதற்கு ஆர்வமற்று இருப்பது அது அவனைச் சோம்பேறியாக்கும் இந்தச் சோம்பேறித்தனம் அவனை அறிவில்லாதவன், மூடன் எனக்கூற வைக்கும்.

## பாலைவனம் சோலையாகின்றது

மணல் மலையின்கீழ் பிரமாண்டமான நீர்த்தேக்கம் இருப்பது எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எகிப்தின் மேற்குப் பாலைவனத்தின்கீழ் பிரமாண்டமான நீர்த்தேக்கம் இருப்பது அதிசயமான செய்திதான் - அதிலும் பெரிய அதிசயம் அந்நீர்த்தேக்கம் கண்டுபிடிக்கப்பட்டவிதம்.

அமெரிக்க கப்பலான கொலம்பியா பற்றிக் கேள்விப்பட்டு இருப்பீர்கள் பூமியின் மேற்பரப்பின் கீழ் உள்ள நீர் வளங்களை விண்வெளியில் இருந்தே படம்பிடித்து கொடுக்கும் திறன் வாய்ந்த ஆய்கருவிகள் கொலம்பியாவில் உண்டு. எகிப்திய பாலைவனங்களுக்குக் கீழ் உள்ள நீர் வளங்களை கொலம்பியா படம்பிடித்தது.

அந்தப் படங்களின் மூலம்தான் இந்த நீர்த்தேக்கம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. எகிப்தில் நைல் நதி ஊற்றெடுக்கும் எதியோப்பியாவிலும் சூடானிலும் கடந்த பன்னிரண்டு வருடங்களாக வரட்சி தாண்டவமாடுகின்றது. அந்தப் பகுதி மக்களுக்கு இந்த நீர்த்தேக்கம் தெம்பைக் கொடுக்கிறது.

நிலக்கீழ் நீரைக் கொண்ட எகிப்தின் பாலைவனங்கள் சோலைவனமாகப் போகின்றன. இந் நீர்த்தேக்கத்தில் உள்ள நீர் 200 ஆண்டுகளுக்கு மட்டுமே போதுமானது என்று டாக்டர் அல்பாஸ் கணித்துள்ளார்.

நன்றி— அறிவுக்களஞ்சியம் 18




## அரிஸ்டாட்டல்

அரிஸ்டாட்டல் கிரேக்க நாட்டில் ஸ்ட்டாகிரா என்னும் ஊரில் பிறந்தார். இவர் 17 வயது முடிந்த பின்பு அதன்ஸ் நகரத்திற்குச் சென்றார். அங்கு அப்போது பிளேட்டோ என்னும் பெரிய அறிஞர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அரிஸ்ட்டாட்டில் அவரது மாணவரானார். இருபது ஆண்டுகள் அவரிடம் தத்துவம் பயின்றார். அத்துடன் பல விஞ்ஞான ஆராட்சிகளையும் செய்தார்; சிறந்த கட்டுரைகளையும் எழுதினார். பின்னர் மாசிடோனியா நாட்டு மன்னர் பிலிப் என்பவர் தம் மகனுக்கு ஆசிரியராக இருக்கும்படி அரிஸ்டாட்டிலை வேண்டிக் கொண்டார். அரிஸ்டாட்டிலும் இணங்கினார். அந்த இளவரசர் உலகப் புகழ் பெற்ற மகா அலெக்சாந்தர். (த.க)

அரிஸ்டாட்டில் சில ஆண்டுகள் கழித்து அதன்ஸ் நகருக்குத் திரும்பினார். அங்கு ஒரு பள்ளிக்கூடத்தைத் தொடங்கினார். தத்துவம், விஞ்ஞானம், அரசியல் முதலியவற்றைப் போதித்தார். அலெக்சாந்தர் இறந்த பிறகு அரிஸ்டாட்டிலுக்கு ஆதரவு குறைந்தது. அதனால் அதன்ஸ் நகரத்தை விட்டு இவர் வெளியேற நேர்ந்தது. இவர் தம் 62 ஆம் வயதில் காலமானார்.

அகத்தின் அழகு எழுத்தில் தெரியும் — நிறுவனர் —

வாழ்க்கையில் உன்னத இலட்சியத்தைத் தேடும் ஞானமே உண்மையான கல்வியாகும்.

— வினோபா —

# அலெக்சாந்தர்

✱✱✱✱✱✱✱✱

மகா (கி.மு 356 - 323) அலெக்சாந்தர் உலகப் புகழ் பெற்ற வீரர். மாசிடோனியா நாட்டு மன்னர். இவர் இளமையிலேயே நிறைந்தவீரமும், பிறநாடுகளை வெற்றி கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் கொண்டிருந்தார், தம் தந்தை பிலிப் அண்டை நாடுகளுடன் போராடி வெற்றி பெற்று வருவதைக் கண்ட அலெக்சாந்தர், ''நான் போரிட்டு வெல்வதற்கு ஒரு நாடும் வைக்காமல் எல்லா நாடுகளையும் என் தந்தையே வென்று வருகிறாரே!'' என்று ஏங்கினாராம். இவருடைய வீரத்தையும் ஆர்வத்தையும், ஆற்றலையும் தூண்டி விட்டவர் இவருடைய ஆசிரியரான அரிஸ்டாட்டிலே (த.க) ஆவார்.

அலெக்சாந்தர் தமது இருபதாம் வயதில் தந்தையை இழந்தார். நாட்டில் பல குழப்பங்கள் உண்டாயின, அலெக்சாந்தர் தம் போர்த் திறமையால் குழப்பங்களையும், கலகங்களையும் அடக்கி கிரீஸ் நாடு முழுவதற்கும் அரசரானார்.

உள்நாட்டில் அமைதியை நிலை நாட்டிய பின் அண்டை நாடுகளையும் தமது போர்த் திறமையினால் கைப்பற்றினார். இவ்வாறு இவரின் போர்த் திறமைகள் வளர்ந்து கொண்டு போக இவரது போர்த் திறமையைத் தூண்டி விட அரிஸ்டாட்டிலே காரணமானார்.

நன்றி.

தொகுத்து அளிப்பவர்:

*கந்தசாமி - வாணிமுகுந்தன்*

ஆண்டு 9

யா/ஹாட்லிக் கல்லூரி.

# குடாநாடு பாலைநிலமாகுமா?

இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் இங்கு வந்து சென்ற இஸ்ரேலிய நிபுணர் ஒருவர் யாழ்குடாநாடு பாலைவனமாகிவிடும் என்று கருத்துத் தெரிவித்திருந்தார். தரைக்கீழ் நீரைக் கூடுதலாக இறைத்துப் பாவிப்பதால் நீர்வளம் குன்றிப் பாலையாகும் என்பது அவர் கருத்து.

பெய்கின்ற மழைநீரைக் தரையின் கீழ் தானாகவே இயற்கை இங்கு சேகரித்து வைக்கிறது. குளங்களையும், குட்டைகளையும் மண்டி சேரவிடாது காலத்துக்குக் காலம் துப்பரவாக்குவதன் மூலம் மழை நீரைத் தரையின்கீழ் சேகரித்து வருகின்றோம்.

இயந்திரங்கள் மூலம் கூடுதலாக இறைப்பதால் கடல் உவர்நீர் நன்னீர்ப்பீடத்தினுள் சேர்ந்துவிடும் அபாயமும், அதனால் கிணறுகள் உவராகும் நிலையும் இருந்தது. ஆனால் இன்று துலா, பட்டை முறை இருப்பதால் அத்தகைய பயமும் இல்லை.

நன்றி: நங்கூரம்.

# மூளைக்கு வேலை * 5

ஸ்ரீ குமரன்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அ | செ | ஞ் | சி | லு | வை | ச் | ச |
| ற | க | றெ | ட் | பா | ழு | ம | ங் |
| வ | கு | தி | ஸ் | னா | கு | ர | க |
| ழி | எ | லி | க | ட | க் | ட் | ம் |
| ப் | போ | ரா | ட் | ள் | ரூ | எஸ் | சி |
| கி | யூ | டெ | க் | போ | பு | கு | எப் |
| ம் | க | ழ | க | க் | சி | ன | மி |
| ம் | ய | தி | நி | வு | ழ் | வா | ர் |

இதில் தரப்பட்டுள்ள 64 கட்டங்களில் யாழ்ப்பாணத்திலுள்ள சில அரசசார்பற்ற நிறுவனங்களின் பெயர்கள் ஒழிந்துள்ளன. அவற்றைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம். பெட்டிகள் தாவக்கூடாது என்பதை மறக்க வேண்டாம்.

★ விடையைத் தயார்படுத்திக் கொண்டு பக்கம் - 10 ஐப் பார்க்கவும்.

**அறிவியல் ஐயங்கள்** என்னும் மாணவருக்கான அறிவியல் பகுதியை அடுத்த இதழில் ஆரம்பிக்க உள்ளோம். உங்களிற்கு உள்ள எந்தவகை ஐயப்பாடுகளையும், அத்துறைசார்ந்த வல்லுனர்கள் மூலம் தெளிவாக்குவோம். தவறாது வினாக்களை எழுதியனுப்புங்கள்.

ஸ—

# புதிர்

தொகுப்பு:

**செவ்வந்தி**

1) வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வேகமாக வீசிக்கொண்டிருக்கும் காற்றைக் கிழித்துக் கொண்டு மின்சாரப் புகைவண்டி ஒன்று வடக்கை நோக்கி வேகமாக பயணத்தை தொடர்ந்து கொண்டிருந்தது. இப்பயணத்தின்போது இப்புகைவண்டி வெளிவிடும்புகை எத்திசையை நோக்கி போகும்?

2) நாற்சந்தி ஒன்றில் ஒருபக்க வீதியால் காரும், மறுபக்க வீதியால் மோட்டார் வண்டியும் - அடுத்தபக்க வீதியால் மாட்டுவண்டியும் இதற்கு எதிர்த்திசையால் லொறியும் எதிரும் புதிருமாக ஒன்றோடு ஒன்று மோதுவது போன்று சடுதியாக நிறுத்த முயற்சிக்கப் பெற்றது. என்ன நிகழுமோ ஏது நிகழுமோ என்று மக்கள் எதிர்பார்த்து நின்றனர். எங்கே நீங்கள் கூறுங்கள் பார்க்கலாம் என்ன நடக்குமென்று?

விடையை 12-ம் பக்கம் பார்க்கவும்

ஸ—

## மூளைக்கு வேலை ஐந்திற்கான விடைகள்

(1) அகதிகள் புனர்வாழ்வு நிதியம்
(2) செஞ்சிலுவைச் சங்கம்
(3) அகதிகள் புனர்வாழ்வுக் கழகம்
(4) புனர்வாழ்வுக் கழகம்
(5) கியூடெக்
(6) போரூட்
(7) அறவழிப் போராட்டக் குழு
(8) றெட்பானா
(9) எஸ். சி. எப்.

**சுறா:** சுறாமீனில் 200 வகை உள்ளன. அவற்றில் சில முட்டையிட்டும், சில குட்டிபோட்டும் தமது இனத்தை விருத்தி செய்கின்றன. இவற்றில் சில 30 அடி நீளமானவை. வெள்ளை சுறாமீன் டைகர் என்ற இன சுறாமீன்களே மிக அபாயகரமானவை. இவ்இன சுறாமீன்களிலிருந்தே மீன் எண்ணெய் எடுக்கிறார்கள்.

நன்றி: அறிவுக் களஞ்சியம் 18.

# உலக வலம்......

## அறிந்து கொள்ளுங்கள்!

### பெரிய கண்டம்

ஆசியாவாகும் இது 41,167 920Km² பரப்பளவுள்ளது,

### பெரிய சமுத்திரம்

பசுபிக்காகும் 166241000 Km² பரப்பளவுள்ளது, மொத்தக் கடல் நீரின் கனவளவில் இது 52% இதை உள்ளடக்கியுள்ளது. இதுவே மிகவும் ஆழமானதும் ஆகும். 4267m ஆழமுள்ளது

### பெரிய பரப்பளவுள்ள நாடு

ரஷ்யாவாகும் இது 17075000 Km² பரப்பளவுள்ளது. முன்னர் இவ்விடத்தை சோவியத் யூனியன் U. S. S. R பெற்றது, தற்போது இந்நாடு 15 குடியரசுகளாக பிரிந்து விட்டது. இவற்றுள் ஒன்று தான் தற்போது பெரிதாகவுள்ள ரஷ்யாவாகும்

### பெரிய சுவர்

வட சீனாவிலுள்ள தற்போதைய உலக அதிசயங்களில் ஒன்றான சீனப் பெரும் சுவர்தான், இது 2,400 Km நீளமுள்ளது,

### பெரிய கடல் நீரேரி

கஸ்பியன் கடல் ஆகும். இது 394299 Km² பரப்பளவுள்ளது. ஆழமானது ரஷ்யாவுள்ள பயிக்கால் ஏரியாகும். பெரிய நன்நீர் ஏரி வட அமெரிக்காவிலுள்ள கப்பீரியர் ஏரி ஆகும். 82814 Km² பரப்புள்ளது.

தொகுப்பு: சுப. சீலன்

### பெரிய பாலைவனம்

வட ஆபிரிக்காவிலுள்ள சகாரா ஆகும். இது 9065000 Km² பரப்புள்ளது,

### பெரிய கடல்

தென்சீனக் கடலாகும். இது 2974600 Km² பரப்புள்ளது.

### பெரிய தீவு

ஆட்டிச் சமுத்திரத்திலுள்ள கிறீலன்ட் தீவு ஆகும். இது 2175600 Km² பரப்புள்ளது,

### பெரிய விரிகுடா

வடகனடாவிலுள்ள ஹட்சன் விரிகுடாவாகும், இதன் கடற் பரப்பு 12,268 Km² ஆகும்,

### பெரிய விமானத் தளம்

சவூதி அரேபியாவிலுள்ள கிங்காலித் இன்ரநசனல் ஆகும், இதன் பரப்பு 223Km².

### பெரிய துறைமுகம்

நியூயோக்கின் நியூஜெர்சியிலுள்ளது, இதனுள் 391 கப்பல்கள் ஒரே நேரத்தில் நங்கூரமிட்டு நிற்க முடியும்.

## மிகப் பெரிய ஸ்ரேடியம்

பிராகில் உள்ள (செக்கஸ்லாவாக்கியா) ஸ்பீரா ஹேறங் இதில் ஒரே நேரத்தில் 240000 பேர் அமர முடியும்,

## மிகப் பெரிய வங்கி

ஸ்ரேற் பாங் ஒங் இந்தியா 1991 இதன் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 12,462 ஆகும். அதன் சொத்து 132000 கோடி ரூபா

## மிகப் பெரிய விலங்கு

திமிங்கிலமாகும், இதன் நீளம் 30m ஆகும். இது ஓர் முலையூட்டியாகும்.

## கோள்களிலே......

★ மிகவும் பெரியது - வியாழன்

★ மிகவும் சிறியது - புளூட்டோ

★ மிகவும் குளிரானது - ,, (இது தண்ணீரும் மீதேன் வாயுவும் சேர்ந்து பனிப் பந்து போன்ற புதிதானதோர் கோள்)

★ மிக வேகமானது - புதன் சூரியனுக்கு மிக அண்மையிலுள்ளது - புதன்.

★ பூமிக்கு மிக அண்மையிலுள்ளது - வெள்ளி

★ சூரியனுக்கு மிகத் தொலைவிலுள்ளது - புளூட்டோ.

□ ★ □

## புதிருக்கான விடை

1. மின்சாரப் புகைவண்டி புகை விடுவதில்லை.
2. மாடு நடக்கும்.

★ முகமன் கூறுவோரின் அடுத்த பிறவி குருட்டுப் பாம்பு ஒளி இல்லாது போனால் உண்மையும் பொய் பேசும்.

— பிள்ளையார் கதை —

★ கல்விக்காக உயிரைக் கொடுப்பவன் ஒருபோதும் மரணமாவதில்லை.

— நபிகள் நாயகம் —

★ வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிக்கும் திறமை கல்வியேய ஏகும்.

— ராபின் —

★ கல்வியை நல்லாசிரியரிடத்தே சந்தேகமும் விபரீதமும் அறக்கற்றல் வேண்டும்.

— நாவலர் —

★ அனைவருக்கும் பயன் தரத்தக்க கல்வியை பிழை நீங்கக் கற்க வேண்டும். அப்படிக் கற்றபின் கற்றவழிநின்று ஒழுகுதல் மாந்தர் கடனாகும்.

— திருவள்ளுவர் —

# அறிவுப் போட்டி - 6

1. ஐம்பெருங் காப்பியங்கள் எவை?
2. பழமை வாய்ந்த மாமேதை லெனினின் உடலைப் புதைக்கப் போவதாகச் செய்தி வந்ததல்லவா? அவ்வுடல் எவ்வளவு காலம் பாதுகாக்கப்பட்டு வந்தது? லெனின் யார்?
3. புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சியை எழுதியவர் யார்? அவரது புனை பெயரென்ன?
4. இவ்வாண்டுக்கான நோபல் சமாதானப்பரிசு யார் யாருக்கு கிடைத்துள்ளது? அவர்களிருவரும் யாவர்?
5. ஆழிக்குமரன் ஆனந்தன் என்ற நீச்சல் வீரன் பிறந்த இடம் எது? அவன் எங்கு சாதனை நிலைநாட்டி மரணித்தான்?
6. உலகப் புகழ்பெற்ற மோனலிசா ஓவியத்தை வரைந்தவர் யார்?
7. தனியொருவனாக அரும்பொருட்களைச் சேகரித்து வைத்துள்ள பெரியார் யார்? அவருக்கு வழங்கப்பட்ட விருது எது?
8. பூமி வட்டமானது என முதலில் கூறிய கிரேக்க அறிஞர் யார்? சந்திரனின் விட்டம் எவ்வளவு?
9. புவியீர்ப்புக் கொள்கையை கண்டறிந்தவர் யார்? அவர் எங்கு பிறந்தார்?
10. மனித உரிமைகள் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
11. உடன்பிறந்தே கொல்லும் வியாதி என்று சுற்றத்தவரை ஔவையார் எவ்வாறு கூறியுள்ளார்?
12. ஔவையார் கூறிய நான்கு அற்புதங்கள் எவை?
13. இழிந்த செயலைச் செய்வதிலும் பார்க்க உயிர்விடுதல் மேலானது என ஔவையார் கூறிய இழிந்த செயல் எதுவாகும்?
14. உள்ளத்தில் கள்ளமில்லாதவர்க்கு தருஞ்சிவந்த தாமரையாள் எவை எவையைக் கொடுப்பாள்?
15. அறிவில்லாத மாந்தர்க்கு எது கூற்றம் - பொருள் இல்லாத மாந்தர்க்கு எது கூற்றம் - வாழைக்கு எது கூற்றம் - வாழ்க்கைக்கு எது கூற்றம் -
16. 1993 ம் ஆண்டின் தேசாபிமானி யார் என்று கேட்டு ஒரு சஞ்சிகை நடாத்திய போட்டியில் விநாயகர் தரும நிதிய நிறுவனர் அவர்களை இவ்வாண்டின் தேசாபிமானியாக தெரிவு செய்துள்ளது. இப்போட்டியை நடாத்திய சஞ்சிகையின் பெயரென்ன?

*சரியான விடைகளை 28 - 02 - 94 க்கு முன்னர்*

நிறுவனர்

அறிவுப்போட்டி - விநாயகர் தரும நிதியம்,


புலோலி மேற்கு, பருத்தித்துறை.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

௭—

# சொர்க்கக்கனி வாழைப்பழம்

—சுபா—



> தமிழர் தம் பண்பாட்டிலும், சாப்பாட்டிலும் முக்கிய பங்கேற்கும் வாழைப்பழத்திற்கு ஐரோப்பியர் இட்ட பெயர்தான் 'சொர்க்கக்கனி'

'' வாழைப் பழத்தை உரித்து......'' என சுலபமாக உள்ளெடுக்கப்படக்கூடிய சுவையான இப்பழம் தாவரவியலில் 'சதையப்பழ'' வகைக்குரியதாகக் காணப்படுகின்றது.

நுண்ணங்கிகளின் தாக்கத்தினாலும்' பூச்சிகளின் தாக்கத்தினாலும் உண்ணக்கூடிய சதைப்பற்றான பகுதியைப் பாதுகாத்து கடினமான மேல்தோல் காணப்படும்.

> சமிபாட்டை மேம்படுத்த மட்டுமே வாழைப்பழம் உதவுவதாக கருதி, அத்தொழிலையே முக்கியப்படுத்தும் எம்மில் பலருக்கு அதன் அளப்பரிய-பயன்கள் தெரியாது.

✳ *இரத்தச்சோகை நீங்க:-*

இப்பழத்தில் காணப்படும் அதிகரித்த இரும்புச்சத்து இரத்தச் சோகைக்கு நிவாரணமளிக்கும்.

✳ *குடற்புண் ஆற*

அதிக அமிலத்தன்மையுடன் காணப்படும் சுரப்பிகளை நடுநிலைப் படுத்தி வயிற்றுச் சுவர்களில் வலியைக் கட்டுப்படுத்தும்.

✳ *வயிற்றுப்போக்கு நீங்க:-*

சுலபமாக மலத்தை வெளியேற்ற உதவுகிறது.

பாலும் பழமும் அருந்தி விரதம் அனுட்டிப்பது மருத்துவ ரீதியிலும் வரவேற்கப்படுகிறது.

✳ *மிகு எடையைக் குறைப்பதற்கு:-*

எடைக் குறைப்பில் ஈடுபடுவோர் வாழைப்பழமும், பாலும் தொடர்ந்து 10 தினங்களிற்கு எடுத்து வந்தால் அளவான தேகம் உருவாகும். இதற்கு முக்கிய காரணம் எடை அதிகரிப்பிற்கு பிரதான காரணிகளில் ஒன்றாக அமையும் சோடியம் வாழைப்பழத்தில் காணப்படுவதில்லை.

## 100g வாழைப் பழத்தில் அடங்கியுள்ளவை

(முக்கியமானவை)

1. நீர் – 70·1%
2. புரதம் – 1·2%
3. கொழுப்பு – 0.3%
4. காபோவைதரேற் – 27.2%

*எடுத்தாண்ட அறிவியல் மலர்கள்*

★ முக்கனிகள்
★ உங்கள் உடல் நலம்
★ பயன் தரு வாழை

எழுதியவர்:- சி. சுபசீலன்
கரவை கலை இலக்கிய வட்டம்
கரவெட்டி.

## சாய்ந்த கோபுரம்


சாய்ந்த கோபுரம் பைசா (Pisa)என்ற இடத்தில் இருப்பதும் உலக அதிசயங்களுள் ஒன்றான இதை பார்வையாளர்கள் பார்த்து வியந்து வந்ததும் எல்லோருக்கும் தெரிந்த விடயம்தான். (1174 - 1372) காலப்பகுதியில் கட்டப்பட்ட இந்தப் பைசா சாய்ந்த கோபுரம் (Pisa leaning-towes) சமீபத்தில் பார்வையாளர்கள் சென்று பார்க்க இயலாதபடி மூடப்பட்டுவிட்டது. இந்தச் சாயும் கோபுரம் உண்மையிலேயே மெல்ல மெல்லச் சாய்ந்து வருவதால் ஒருநாள் தரையோடு படுத்து விடலாம் என்று அஞ்சப்படுகின்றது.

இந்த கோபுரத்தின்மீது விமானங்கள் பறப்பதற்குக் கூட இத்தாலிய அரசு தடைவிதித்துள்ளது. விமானங்கள் ஏற்படுத்தும் ஒலி அதிர்ச்சிகள் இக்கட்டிடத்தைப் பாதிக்கும் என்ற அச்சமே இதற்குக் காரணம்.

— நன்றி நங்கூரம் —

உ

# குறுக்கெழுத்துப் போட்டி




தயாரிப்பு: S. ரமேஸ்
அல்வாய்.

முடிவு திகதி
**28 - 02 - 1994**

அனுப்ப வேண்டிய முகவரி:

நிறுவனர்
குறுக்கெழுத்துப் போட்டி
விநாயகர் தரும நிதியம்
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

## இடமிருந்து வலம்

1) நீச்சலை தேசிய விளையாட்டாகக் கொண்ட நாடு-
5) முதன் முதல் மொழியை இயற்றிய நாடு-
8) டைனமோவைக் கண்டு பிடித்தவர்-
9) கிளி மரங்களில் இவற்றை அமைத்து முட்டை இடும்- (குழம்பியுள்ளது)
10) கதிர்ப்பைக் கண்டு பிடித்தவர்- (தலைகீழாயுள்ளது)

## மேலிருந்து கீழ்

2) கற்குலேற்றரைக் கண்டு பிடித்தவர்-
3) உலகில் முதன்முதல் பூகம்பம் உண்டான நாடு-
4) சூரியன் நடு இரவில் உதிக்கும் நாடு-
5) அச்சடிக்கும் முறையை முதன் முதல் கண்டு பிடித்தவர்கள்-
6) ஒலிம்பிக் முதன் முதல் நடைபெற்ற நாடு-
7) சணல் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு- (தலைகீழாயுள்ளது)

---

யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவர்த்தி பரம்பரையைச் சேர்ந்த அரசகேசரி என்பவர் ''இரகுவமிசம்'' என்னும் காவியத்தை இயற்றினார். ஈழத்தில் முதன் முதலில் இயற்றப்பட்ட தமிழ்க் காவியம் இது தான்.

நன்றி: அறிவுக் களஞ்சியம் 18

# நொடியும் விடையும்

## — கோப்பாய் சிவம் —

1) மூத்தவர் ஆற்றிலே உணவுக்கேற்றவர் காட்டிலே நற்குறி சொல்பவர் வீட்டிலே.

2) ஆழக்குழி வெட்டி அதிலே ஓர் முட்டையிட்டு அண்ணாந்து பார்த்தால் தொண்ணூறு முட்டை.

3) அடித்தாலும் அழமாட்டான் முறுக்கினால் முணு முணுப்பான்.

4) வெள்ளைக்காரன் பிள்ளைக்கு தலையில்மட்டும் கறுப்புத் தொப்பி.

5) உலர்ந்த கொம்பிலே மலர்ந்த ஒருபூ கதிரவனை மறைக்கிறது.

6) கோட்டைக் கதவுகள் திறந்து விட்டால் கோடி வார்த்தைகள் கொட்டிவிடும்.

7) அடித்தால் அழுவான் பிரித்தால் சிரிப்பான்.

8) கவிழ்ந்து பூப்பூத்து நிமிர்ந்து காய் காய்க்கும்.

9) எரியாமல் கரியாகிக் கரியெல்லாம் வரியாகிக் குறுக்குப் போடும்.

10) மலைவீதியில் இருப்பதென்ன? மாதர்கையில் ஜொலிப்பதென்ன.

11) வண்ண வண்ணச் சேலைக்காரி வயது வந்த பூக்காரி வழிநெடுகப் போகிறாள்.

12) வாயெல்லாம் ஈறு ஈறெல்லாம் பல்லு,

### நொடிக்கான விடை

| | |
|---|---|
| 1. முதலை உடும்பு - பல்லி | 2. தென்னைமரம் |
| 3. வானொலிப்பெட்டி | 4. தீக்குச்சி |
| 5. குடை | 6. உதடு |
| 7. தேங்காய் | 8. எள்ளு |
| 9. பென்சில் | 10. வளையல் |
| 11. வண்ணாத்திப்பூச்சி | 12. சீப்பு |

உ—

# கண்ணீர் சிந்தும் ஹிரோஷிமா!

கண்களைப் பறித்தது மின்னல்... பளிச்சென்று ஒளியில் என் பார்வை மங்கியது. ஏதோ ஒன்று வானைப்பிளந்து கொண்டு கீழ் நோக்கி வருகிறது ...... ஏதோஒரு உந்துதலால் நான் தரையில் பாய்கின்றேன் ... மண்ணில் புரண்டு, படர்ந்து படிந்தேன்... உடம்பு முழுவதும் ஒரு எரிச்சல் படர்வதை உணர்ந்தேன்...... என் நினைவுகள் என்னைவிட்டு அகலத் துடிக்கின்றனவோ? எங்கும் பூரண அமைதி. ...மெல்லிய தாக தொலை தூரத்தில் இடி முழக்கம்...... தொடர்ந்து அதி பயங்கர சத்தத்துடன் வெடிப்பு ... பயத்துடன் மெல்ல தலை தூக்கிப் பார்த்தேன். எங்கும் ஒரே புகை, அது மேலும் மேலும் விண்ணை நோக்கி வளர்ந்து கொண்டே செல்கிறது. அதன் உருவமும், நிறமும், ஒளியும் மாறிக் கொண்டே செல்கின்றன. மிகப் பெரும் புகைமண்டலமாக உருவெடுத்து அந்த நகரத்தையே மூடி விட்டது.

ஒரு நகரத்தை அப்படியே விழுங்கிய முதல் அணுகுண்டு வெடிப்பினை நேரில் பார்த்தவரின் அனுபவந்தான் இது. இதே போல இன்னும் ஆயிரமாயிரம் நெஞ்சு பிளக்கும் அனுபவங்கள்!

1945-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ம் தேதி அதிகாலை... வெடிகுண்டு நெருப்பில் எரிந்து

# உலக வரலாற்றின் கறை படிந்த மாதம் ஆகஸ்ட் 1945.

சாம்பலாகி விட்ட நாகசாகி ரயில் நிலையத்தை ஒட்டியதெருவில் பன்னிரெண்டு வயதுச்சிறுவனொருவன் நடந்து செல்கிறான். அவன் பெயர் யோச்சன் அவனுடைய தம்பியை தன் தோளில் தூக்கிச் செல்கின்றான். பால்வடியும் அந்தப் பிஞ்சு முகங்களிரண்டும் அடையாளம் தெரியாத அளவுக்கு கருகிவிட்டிருக்கின்றன. அவன் எங்கே செல்கிறான்? தன்னுடைய தாய், தந்தை, சுற்றத்தார், நண்பர்களைப் போல் கோரச் சாவைத் தேடிச் செல்கிறானா அவன்?

1986 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ஆம் தேதி. காலம் தான் எவ்வளவு விரைவாய்க் கடந்து விட்டது. யோச்சனுக்கு இன்று வயது 53. அவருடைய தம்பி இன்று உயிருடன் இல்லை. மருத்துவத் துறைக்கே புரியாத மர்ம நோய் அவனைப் பலி கொண்டு விட்டது. எத்தனையோ ஆண்டுகள் கழிந்தும், இத்தனை வயதான பின்னரும் கூட குண்டு வெடிப்பின் கோர நினைவுகள் யோச்சனது நெஞ்சைக் கலக்கியடிக்கின்றன. அதை நினைத்து விட்டாலே அவரது முகத்தில் அச்சம் குடிகொண்டு விடுகிறது, அதிர்ச்சியும் கலவரமும் பதட்டமும் அவரை பிடித்துக் கொண்டு விடுகின்றன.

அந்த நினைவைப்போலவே அன்று ஏற்பட்ட முக வடுக்களும்

இன்னும் மறையவில்லை. அணுகுண்டால் நாசமாக்கப்பட்ட ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களில் தமது உடமைகள்னைத்தையும் தொலைத்து விட்டு கோரப்படுத்தப்பட்ட உடல்களோடு உயிர் தப்பி வந்த பரிதாபத்திற்குரிய லட்சக்கணக்கானோரில் யோச்சனும் ஒருவர்.

ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா? உலக மக்களின் மனங்களை உலுக்கிய, நெஞ்சங்களைப் பிளந்த அணுகுண்டு வெடிப்புச் சம்பவங்கள் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6 ம் தேதியும் 9 ஆம் தேதியும் நிகழ்ந்தனவே, அதை நீங்கள் கேள்விப் பட்டதில்லையா?

ஜப்பானில் நாகசாகி, ஹிரோஷிமா நகரங்களின் மீது ஈவிரக்கமின்றி அமெரிக்கா வீசிய இரண்டு அணுகுண்டுகள் அந்த நகரங்கள் முழுவதையும் நெருப்பு மழையில் அழித்தொழித்ததோடு அங்கு அமைதியாக வாழ்ந்து வந்த லட்சக்கணக்கான அப்பாவி மக்களைக் கொன்று குவித்தது உங்களுக்குத் தெரியாதா?

ஆம்! மனித குலத்திற்கு எதிராக மனிதனே உருவாக்கிய மிகவும் நாசகாரமான ஆயுதமே அணுகுண்டு. ஒரே குண்டு ஆயிரக்கணக்கான மக்களை ஒரு நொடியில் கொன்று குவித்து விட்டது. லட்சக்கணக்கானோர் நடைப்பிணங்களாயினர். அணுக் கதிர் வீச்சால் பாதிக்கப்பட்ட பலர் இரத்தப் புற்று நோய்க்கு ஆளாயினர். கருகிய முகங்களுடன் தீய்ந்து தொங்கிய சதைகளுடன் அழுகி நாற்றம் பிடித்த கோரமான உடல்களுடன், அவலச் சின்னங்களாக, நடைப்பிணங்களாக அலைந்து திரிந்தோர் அனேகம்! பெற்ற தாய் தந்தையரை இழந்து அனாதைகளாக்கப் பட்ட சின்னஞ்சிறுசுகள் ஏராளம்! பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த பச்சிளங்குழந்தைகளை அணுகுண்டுக்கு பலிகொடுத்து விட்டு அரற்றி அலைந்த தாய்மார்கள் கொஞ்சமா? அண்ணன் தம்பிகளையும், அக்கா தங்கைகளையும், உறவினர்களையும், நண்பர்களையும் இழந்த துரதிஷ்டசாலிகள் எண்ணிலடங்கா! அணுகுண்டு வெடிப்பின் போதே ஒரேயடியாக உயிரை விட்டு விடாமல் சிறுகச் சிறுக வெந்து, மனம் நொந்து, கவனிக்க ஆளின்றி ஆதரவற்ற அனாதையாய் உயிரை விட்டவர்கள் ஆயிரமாயிரம் பேர்!

**அணுவாயுத யுத்தத்தின் அபாயத்தை விளக்கும் ஒரு நினைவூட்டல் நிகழ்ச்சி இது.**

நாகசாகியில் குண்டு வீசப் பட்ட போது சுமிகோவுக்கு 10 வயது, குண்டு வெடிப்பிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பினாள். அவளுடைய திருமணம் அவளுடைய 21 ஆவது வயதில் 1956 இல் நடந்தது. அவள் ஒரு மகளையும், ஒரு மகனையும் பெற்றெடுத்தாள். அவளுடைய மகள் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போது மருத்துவ உலகிற்கே

புரியாத புதிராக இருந்த நோயினால் பாதிக்கப்பட்டு திடீரென்று மரணமுற்றாள். மகன் இரத்தப் புற்று நோயினால் தாக்கப்பட்டான். நாகசாகி நினைவு நாள் ஒன்றின் போது அவனும் இறந்து போனான். இதேபோன்ற சோகமும், அவலமும் இன்றும் அங்கு சொந்தம் கொண்டாடிக் கொண்டிருக்கின்றன.

அழகுமிகு நாகசாகி நகரத்தை மயானக் காடாக மாற்றியது அந்த அணுகுண்டு. அந்தச் சுடு காட்டில் மரண ஓலங்களுக்கிடையே பணிபுரிந்த ஒரு மருத்துவர் தம்நெஞ்சை உலுக்கிய அந்தச் சம்பவத்தை விபரிப்பதைக் கேளுங்கள்; ''அணுகுண்டு வெடித்த இடத்திற்கு அருகில் உள்ள மருத்துவமனைக்கு

## FLASH BACK!

குண்டு வெடிப்பு நிகழ்ந்த உடனேயே விரைந்தேன். ஆனால், அந்த மருத்துவ மனை அணுகுண்டால் தகர்க்கப்பட்டு தரைமட்டமாகிக் கிடந்தது. ஆனால் அந்த மருத்துவ மனையை நோக்கி ஆயிரக்கணக்கான மக்கள் படையெடுத்து வந்து கொண்டிருந்தனர். தங்கள் காயங்களின் வேதனையைத் தாங்கமுடியாமல் உடனே சிகிச்சையளிக்கும்படி அவர்கள் கதறி அழுதனர். அப்படி வந்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் அதிர்ச்சியினால் பேசும் சக்தியை இழந்துவிட்டிருந்தனர். உடலெல்லாம் வெந்து சதைப்பகுதிகள் பிய்ந்து தொங்கிக்கொண்டிருந்தன. குண்டுவெடிப்பில் சிக்கிய பலரின் உடல்கள் சின்னாபின்னமாகி சிதறடிக்கப்பட்டுக் கிடந்தன. காயங்களின் மரணவேதனையைத் தாங்க முடியாத ஒருவர் தீயணைப்பதற்கென தொட்டியில் நிரப்பி வைக்கப்பட்டிருந்த தண்ணீரில் குதித்தார். இன்னும் பலர் அசையவும், பேசவும் கூட முடியாத நிலையில் ஆங்காங்கே அலங்கோலமாக விழுந்து கிடந்தனர். நெருப்பில் வெந்து சிதைந்து கிடந்த உடல்களைப் பார்க்க இயலாத அளவுக்கு எனது மனோதிடம் குலைந்து போய் விட்டது.

அணுகுண்டு வெடிப்பு நிகழ்ந்த போது யாமமோட்டாவிற்கு பன்னிரண்டு வயது. குண்டுவெடிப்பு நிகழ்ந்த இரண்டு மாதத்தில் அவருடைய தலைமுடி முழுவதும் உதிர்ந்து 12 வயதிலேயே வழுக்கையாகிவிட்டது. கதிர்வீச்சின் கேடுகளிலிருந்து இன்றுவரை அவள் மீளவில்லை.

இப்படிப்பட்ட கொடூரமான ஹிரோஷிமாக்களும், நாகசாகிகளும் இன்னும் தொடர வேண்டுமா?

ஹிரோஷிமாவில் அணுகுண்டு வீசப்பட்டு 47 ஆண்டுகள் கழிந்து விட்டன. இருப்பினும், அக்கொடிய நிமிடத்தின் வேதனையும், பயமும், வெறுப்பும், கொடூரமும் இன்னும் மறையாது இருக்கின்றது. ஆனால் உலக முழுவதும் மற்றொரு கொடிய யுத்தத்துக்கான தயாரிப்புகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

*போரில் மாண்டவடவர்களின் நினைவாக ஹிரோஷிமா நகர மையத்தில் நினைவுச் சின்னம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. அதில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.*

*"சமாதானத்துடன் அமைதியாக ஓய்வு எடுங்கள்*
*இன்னொருமுறை இவ்வாறு நிகழாதிருக்கட்டும்"*

ஆனால், இனியொரு போர் மூண்டால் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கவோ, லாப நஷ்டங் களைக் கணக்கிடவோ கூட யாரும் எஞ்சியிருக்கமாட்டார் கள். மனித குலத்தைப் பூண் டோடு அழித்து நாம் வாழும் உலகத்தை சுக்கல் சுக்கலாக உடைத்து நொறுக்கக் கூடிய அளவிற்கு அதி நவீன படு பயங் கர ஆயுதங்கள் உற்பத்தி செய்து குவிக்கப்பட்டுள்ளன.

ஹிரோஷிமா, நாகசாகி நிகழ்ச்சிகள் இனியும் ஏற்படாமல் தடுக்கப்பட வேண்டாமா?

நன்றி: நங்கூரம்

**தமிழ் நாடு, புதுவை அறிவியல் இயக்கம்.**

---

ள —

## வெல்லக்கட்டி

குட்டிப் பாப்பா ஓடி வா
குறட்பா இனிக்கப்பாடி வா
தட்டித் தட்டி ஆடி வா
தாவித் தாவிக் கூடிவா.

அருமை தாத்தா வள்ளுவர்
அறத்தைச் சொன்ன அண்ணலார்
பெரிய வாழ்வு கொள்ளவே
பேணிப் படிப்பாய் நாளுமே.

சின்னச் சின்னப் பாடலால்
சிறந்த பெரிய கருத்துக்கள்
சொன்ன பெரியவர் வள்ளுவர்
சொல்லைக் கேட்டால் வெல்லுவாய்.

எந்தத்துணையும் ஒப்பிலா
இனிய துணையாம் வள்ளுவம்
அந்தத்துணையைச் சிக்கென
அமைத்துக் கொண்டால் வெற்றியே.

வெல்லக் கட்டி நீயேதான்
வெடிப்பாய்ப்பேசும் குட்டிநீ
வெல்லக் கட்டித் திருக்குறளால்
வெற்றி கொள்வாய் என்றுமே.

தொகுப்பு:-
க. கனகராசா
ஆக்கம்: குறளியம்.

ஏ—

# அறிவுப் போட்டி இல. 5ற்கான விடைகள்

01. உலகத்தில் அண்மையில் முப்பது வருட வீரஞ்செறிந்த போராட்டம் நடத்திய ஒரு நாடு சுதந்திர நாடானது. அந்நாடு எது? எரித்திரியா.

அதற்கு சுதிந்திரம் வழங்கி அங்கீகரித்த நாடு எது? எதியோப்பியா.

02. லேசர்கதிர் இன்று தொழிற்நுட்ப மருத்துவத்துறையில் பெரிதும் பயன்படுகிறது. லேசர்கதிர் என்றால் என்ன? சாதாரண ஒளியைவிட வட்டமான - சீரான பரவிச் சிதறாத ஒருமித்த அதிசக்தி வாய்ந்த ஒளிக்கற்றை இது.

03. உலக அதிசயங்கள் எட்டு ஆகும். அவற்றில் இப்போதுள்ள ஒரே ஒரு அதிசயம் எது? பிரமிட்

அது எங்குள்ளது? எகிப்து

04. தமிழில் இலக்கணம் கூறும் நூல் எது? தொல்காப்பியம்

அதை இயற்றியவர்? தொல்காப்பியர்

05. இந்தநூற்றாண்டின் மாபெரும் விஞ்ஞானி யார்? அல்பேட் ஐன்ஸ்டீன்

அவர் எந்த நாட்டில் பிறந்தார்? ஜேர்மனியில்

06. புவியாயினும் சரி ஏனைய கோள்களாயினும் சரி அவை அந்தரத்தில் நிற்பதற்குக் காரணம்? ஈர்ப்புவிசை

07. உலகில் பொருளாதாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி கண்டுள்ள ஒரு நாட்டில் அண்மையில் பூகம்பம் ஏற்பட்டது. அந்நாடு எது? யப்பான்

இதில் கொல்லப்பட்டவர்கள் எவ்வளவு பேர்? 240 பேர்

08. இலங்கையின் மிகப்பெரிய நதியான மகாவலிகங்கை எங்கு கடலுடன் கலக்கிறது? திருகோணமலையில்

அது கடலுடன் கலக்கும் இடங்களில் அவற்றுக்குப் பெயர் என்ன? வெருகல் - குருகல்

09. சீனப் பெரும் சுவரைக் கட்டிய அரசன் யார்? சின்சிஹிவாங்டி

10. மகாகவி பாரதியார் பெண் விடுதலையைச் சுட்டிப்பாடிய காவியமெது? பாஞ்சாலி சபதம்

அறிவியல் தொடர்

# விண்வெளி காண்போம்

**அங்கம்:** 3 — *நித்தியா.*

பிரபஞ்சத்தின் முக்கிய ஆரம்பக் கண்டு பிடிப்புகள் பூமி, சூரியன் சந்திரன் என்பன பற்றியவை· ஆரம்ப கால கண்டுபிடிப்புகளை மேற்கொண்டவர்கள் பற்றிப் பார்ப்போம்.

பால்வழி மண்டலத்தில்தான் நமது பூமி உள்ளது. இந்தப் பால்வழிமண்டலம் நீண்ட மகுடி போன்றது. குறுக்கு வெட்டாகப் பார்த்தால் சுருள் வடிவம் கொண்டது. அதற்கு நடுவில் பூமி ஒரு சிறு புள்ளியாக உள்ளது.

ஆனால் பால் வழி மண்டலத்தைப் போல எண்ணற்ற மண்டலங்களைக் கொண்டதுதான் பிரபஞ்சம். இது இன்னமும் எல்லையிட முடியாத படி புதிராக - எல்லையற்றதாக உள்ளது. அன்ரோமிடா மண்டலம், *NGC 185* மண்டலம், *M 82* மண்டலம், *M 87* மண்டலம்... இவை பிரபஞ்சத்திலுள்ள சில மண்டலங்கள் சுருள் மண்டலம் என்றும் ஒன்று உண்டு. இதில் சிறிது சிறிதாக நிறைய மண்டலங்கள் உள்ளன· *NGC 4594*, *NGC 1300* என எண்ணற்றவை அப்பாடா! எவ்வளவு பெரிது.

இவற்றை நாம் பார்க்க முடியுமா? இவை எவ்வளவு தூரத்தில் உள்ளன என நீங்கள் கேட்பது எனக்குக் கேட்கிறது.

இவற்றை சாதாரணமாக எமது கண்களால் பார்க்க முடியாது. அன்றியும் பைனாகுலர் எனும் தொலை நோக்கி சிறிய ரெலஸ்கோப்களாலும் பார்க்க முடியாது.

இவற்றைப் பார்பதானால் பெரிய தொலை நோக்கிகள் வேண்டும். தொலை நோக்கிகள் என்றால் என்ன என்று சிலர் கேட்பார்கள்· பூதக் கண்ணாடி என்றும் அதைச் சொல்வார்கள். இந்தக் கண்ணாடியை வைத்து ஒரு பொருளைப் பார்க்கும் போது அது பெரிதாகத் தெரியும். இதனைக் குவிவு வில்லை என்று கூறுவார்.

இப்படி இரண்டு குவிவு வில்லைகளை எடுக்க வேண்டும். அவற்றில் ஒன்று தடிப்புக் கூடியதாக இருக்க வேண்டும். மற்றையது மெல்லியதாக இருக்க வேண்டும். இரண்டு குழாய்களை எடுத்து அவற்றின் ஒவ்வொரு முனையிலும், இவ்விரு குவிவு வில்லைகளை பொருத்த வேண்டும். பின்னர் இவ்விரு குழாய்களையும் ஒன்றுடன் ஒன்று பொருத்த வேண்டும்.

இப்போது எமக்கு ஒரு தொலை நோக்கி கிடைத்துவிடும். இதனை வானை நோக்கிப் பிடித்து நட்சத்திரங்களைப் பார்க்கும் போது அவை சற்றுப் பெரிதாகத் தெரியும். சந்திரனைக் கொஞ்சம் அருகாகப் பார்க்கலாம். நட்சத்திரக் கிரகங்களைத் தெளிவாகப் பார்க்கலாம். வேறொரு ஆராய்ச்சியையும் செய்ய முடியாது.

வானியல் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் அறிவியலாளர்கள் பெரிய தொலை நோக்கிகளைப் பயன்படுத்துகின்றனர். இத்தகைய தொலை நோக்கியினை முதலில் செய்தவர் இங்கிலாந்து நாட்டு விஞ்ஞானியான நியூட்டன் என்பவர் தான். அவரைப் போன்று ஜோர்ஷ், கேஹர்ஷல் போன்றவர்களும் தொலை நோக்கிகளை அமைத்தார்கள். சிறிய தொலை நோக்கியினை முதன் முதலில் செய்தவர் கலிலியோ கலிலி என்ற விஞ்ஞானியே.

கிரகங்கள் இந்த அன்ரோமிடா மண்டலங்களை ஆராய பெரிய தொலை நோக்கிகள் உலக விருத்தியடைந்த நாடுகளில் அமைக்கப்பட்டுள்ளன. அமெரிக்கா, ரஷ்யா, சீனா, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, யப்பான், இந்தியா போன்ற நாடுகளில் இராட்சத தொலை நோக்கிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் நூறு அங்குலம் முதல் இருநூறு அங்குலம் வரையான விட்டங்களைக் கொண்ட குழிவாடிகளைப் பயன்படுத்துகின்றனர்.

இதன் மூலம் ஆராய்ச்சிகள் தொடர்ச்சியான முறையில் மேற்கொள்ளப்படுகின்றன.

௭ —

## நல்இனிய காட்சிகாண உள்ளம் ஏங்குது!

வட்டநிலா எட்டிப்பார்க்குது கிட்டவர
எம்மை அழைக்குது
எட்டி நின்று பார்ப்பதின்பம் என்று
உள்ளம் கூறுது - உன்னை
கிட்டவரும் கருமுகில்கள் முட்டும் போது
நெஞ்சு வேகுது
தொட்டு விலகும் மழை முகில்கள் எட்டும்போது
உள்ளம் சிரிக்குது
அல்லிமலர் உன்வரவு கண்டு துள்ளும்போது
கொள்ளை அழகு கொட்டிக் கிடக்குது
முல்லை மல்லிகை முறுவலித்து இதழ்விரித்து சுகந்தத்தை
அள்ளி இறைக்குது
துள்ளிவரும் வெள்ளிநிலா வரவுகண்டு கடலும்துள்ளுது
கயலும் துள்ளுது
கொள்ளை அழகுகண்டு என்சித்தம் குளிருது
சிந்தை இனிக்குது
தாளைமரம் மீதமர்ந்த சிறுபுள்ளினமும் சிறகடிக்குது
புதுச் சிந்து பாடுது
நாளை உன்வரவு கண்டு நல்இனிய காட்சிகாண
உள்ளம் ஏங்குது

— அல்லி —

உ

★ சிறுகதைப் பக்கம் ★

# இனியன செய்

சி. கணேஸ்
மீசாலை வடக்கு – கொடிகாமம்.

முரளியும் பாலனும் ஒருவகுப்பைச் சேர்ந்த மாணவர்கள். பாலனின் தகப்பனார் வைத்தியராகக் கடமை புரிந்து வந்தார். எனவே பாலனும் படித்து வைத்தியராக வரவிரும்பினான் அவன் வகுப்பில் நன்றாகப் படிப்பான். அவனே ஒவ்வொரு முறையும் முதலாம் பிள்ளையாக வருவான். பாலன் நன்றாகப் படிப்பதும் முதலாம் பிள்ளையாக வருவதும் முரளிக்கு பொறாமை. பாலனின் படிப்பைக் குழப்புவதற்காக முரளி எந்நேரமும் பாலனுடன் சண்டையிடுவான். பாலன் அதை பெரிதுபடுத்தாது இருந்து படிப்பான். முரளி பாலனைப் பார்த்து பெரிய படிப்புக்காரன் என்று கூறுவான் முரளியின் செயல்கள் பாலனுக்குப் பிடிப்பதில்லை.

ஒரு நாள் முரளியும் நண்பனாகிய ரவியும் குளத்தில் நீந்துவதற்காகச் சென்றார்கள். முரளி நண்பனை குளக்கட்டில் பார்க்கவிட்டு தனது வீரசெயல்களைக் காட்டினான். ஒருதடவை நீந்திக்கொண்டு குளத்தின் நடுவே சென்றான். அதையெல்லாம் அவனது நண்பனான ரவி வைத்தகண் வாங்காமல் பார்த்தபடி நின்றான்.

சிறிது நேரத்தில் முரளி குளத்தில் மூழ்கி விட்டான். அவனது நண்பன் குளக்கட்டில் நின்று அதைக் கண்டதும் ஓடிவிட்டான். அப்போது பாலன் குளத்திற்கு அருகால் தோட்டத்திற்கு சென்றுகொண்டிருந்தான் அதேகணம் ''ஐயோ என்னைக் காப்பாற்றுங்கள்'' என்னும் ஒலி குளத்திலிருந்து வந்து பாலனின் காதில் விழுந்தது. உடனே பாலன் ஓடிச்சென்றான். முரளி கத்தியபடி குளத்தில் மூழ்குவதைக் கண்டான். அவன் தனக்குச் செய்த அட்டூழியங்களை நினைத்தான், அதைப் பொருட்படுத்தாது அவனைத் தப்பவைக்க வேண்டும் என்னும் உணர்வு பாலனுக்கு வந்தது. தான் தோட்டத்திற்கு கொண்டு சென்ற கயிற்றை முரளியின் கையில் எறிந்தான். முரளி அக்கயிற்றைப் பிடித்தான். பாலன் கயிற்றை இழுத்து முரளியைக் கரை சேர்த்தான். முரளி சிறிது மயக்க நிலையில் இருந்தான். எனவே அவனை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல நினைத்தான். உடனே அருகே இருந்த வைத்தியசாலைக்கு ஓர் மோட்டார் வாகனம் மூலம் ஏற்றிச் சென்றான். இரண்டு நாளின் பின் முரளி சுகமடைந்தான்.

முரளி தான் செய்த தவறுகளை மன்னிக்கும்படி பாலனிடம் வேண்டினான். பின்னர் அவர்கள் இருவரும் பிரியா நண்பர்களாக நாட்டிற்கு சேவை செய்தார்கள்.

# தனக்கு வந்தால்தான் தெரியும்

சுரேஸ் தினமும் வீட்டில் மனைவி வசந்தியுடன் சண்டை போடு வான். ஒரு நாள் அவன் அவளை நன்கு அடித்து – ஏசிப் பேசி விட்டான். இதைப் பொறுக்காத வசந்தி அழுதவாறே தனது பிறந்த வீடு சென்று விட்டாள். சுரேசுக்கோ தரித்திரம் தொலைந்தது என்று பெரிய மகிழ்ச்சி. ஆனந்தமாக தனது மூன்று தவப்புதல்வர்களுடன் நித்திராதேவியை அணைத்துக் கொண்டான்.

திடீரென அவனது கடைசி மகன் அழும் சத்தம் கேட்டது, திடுக்குற்று எழுந்து கடிகாரத்தை நோக்கினான். நேரம் காலை 5.30 மணி. பாலுக்காகத்தான் கண்ணன் அழுகிறான் என்பது தெரிந்ததும் அவனைச் சமாதானப் படுத்தினான். குழந்தையின் அழுகையைக் கேட்டோ என்னவோ பால்க்காரனும் பாலைக்கொண்டு வந்தான். பாலை வாங்கிக் கொண்டு சமையல் அறையை அடைந்தவன் பால்சட்டியை அடுப்பில் வைத்து பாலைக் கொதிக்க வைத்தான். குழந்தை பசியால் அழுகையை நிறுத்தவில்லை தொடர்ந்து கத்திக் கொண்டே இருந்தது. குழந்தையின் அழுகை அவனது செயலில் வேகத்தைக் கூட்டியது. அடுப்பிலிருந்த பாலை இறக்க, அது தடம் பிரண்டு அவனது கையிலும் காலிலும் கொட்டிவிட கொதிப்பின் வேதனையால் அவன் கலங்கிப் போய்விட்டான்.

அப்போது அவனது இரண்டாவது மகன் மோகன் அப்பா தேனீர் என்று கூறியவாறு அங்கு வந்தான். அப்போதுதான் சுரேசிற்கு வசந்தியைப் பற்றிப் புரிந்தது. அவள் எப்படி இவ்வளவு காலமும் இவர்களை எல்லாம் கவனித்தாள் என்பதை நினைக்கவே அவனுக்கு வியப்பும், வெட்கமும் மாறிமாறி வந்தன. உடனே தனது பிழையை உணர்ந்து கொண்டான். அவசரத்தில் தான் அவளை அழவைத்து விட்டேன் என்பதைப் புரிந்து கொண்டு – வசந்தியின் வீடு சென்று அவளிடம் மன்னிப்புக் கோரி இனி தான் புதிய மனிதன் என்ற புதிய சபதத்துடன் அவளையும் அழைத்துக் கொண்டு சந்தோசத்துடன் வீடு திரும்பினான்.

த. புஸ்பராணி

ஆண்டு 9B, ஞானசாரியார் கல்லூரி – கரவெட்டி.

● இரையே இல்லாமல் பாம்பு 25 மாதங்களும், தவளை 16 மாதங்களும், மூட்டுப்பூச்சி 6 மாதங்களும் உயிர் வாழுமாம்.

நன்றி: அறிவுக் களஞ்சியம் 17.

ஃ—

# அறிவுப் போட்டி இல. 5ல் (ரு)

*சரியான விடை எழுதிப் பரிசில் பெறுவோர்.*

1) செல்வன் து. பிரசாந்தன்
இல. 44, புகையிரதவீதி, கொக்குவில் கிழக்கு–கொக்குவில். 150/-

2) செல்வன் த. பிரதீபன்
ஆண்டு 9 டீ, ஹாட்லிக் கல்லூரி – பருத்தித்துறை. 100/-

3) செல்வன் வேலும்மயிலும் நந்தகுமார்
ஆண்டு 9, ஹாட்லிக் கல்லூரி – பருத்தித்துறை. 75/-

4) செல்வன் செ. வத்சலன்
ஆண்டு 8 ஏ, ஹாட்லிக் கல்லூரி – பருத்தித்துறை. 50/-

## அறநெறிப் போட்டி இல. 3 பரிசில் பெறுவோர்

இப்போட்டியில் பலரும் சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளார்கள். அவர்களின் எழுத்துறுப்பைக் கருத்தில் கொண்டு, மூன்று பேர்களுக்கும் ரூபா 100/-ம், அறத் தமிழ் அகராதி ஒன்றும் பரிசாக வழங்குகின்றோம்.

— நிறுவனர் —

★ செல்வன் மா. சுதர்சன் தமிழொழி மாணவர் மன்றம்–பருத்தித்துறை

★ செல்வி இ. சுயந்தினி இல. 96, அளவெட்டி தெற்கு – அளவெட்டி

★ செல்வி வி. கஜந்தினி இல. 187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,

## விடைகள்

(1) கல்வி அறிவில்லாதவன் பாடிய கவிதை காட்டிலே மயில் ஆடுவதைப் பார்த்துத் தன்னையும் அதுவாகக் கருதிய வான்கோழி தனது இழிந்த சிறகை விரித்து ஆடிய ஆடல் போன்றது,

(2) இதழாற் பெரியது – தாழம்பூ, இதழாற் சிறியது – மகிழம்பூ, சுகந்த மணத்தாற் சிறந்தபூ – மகிழம்பூ. அதுபோல உடலாற் சிறியவராய் இருந்தாலும் செயலாற் சிறியவர் என எண்ண வேண்டாம்.

3) நல்ல மரம் என ஔவையார் குறிப்பிடுவது, சபையின் நடுவே கொடுக்கும் ஏட்டை வாசிக்க இயலாதவனும், அவற்றின் குறிப்புப் பொருளை உணரமாட்டாதவனுமாகிய மூடனே நல்ல மரமாவான்.

(4) சிறிய உமி நீங்கின் நெல் முளைக்காது.

(5) உற்ற இடத்திலுயிர் வழங்குந் தன்மையோர் பற்றலரைக் கண்டால் பணிவரோ என்பதற்கு உவமானமாகக் கூறிய பொருளின் சிறப்பு:- தன்னால் தாங்க முடியாத பாரத்தை கற்தூண் தாங்கினாலும், எவற்றுக்கும் வளைந்து கொடுக்காது தன்னைத் தான் அழிப்பதே அதன் சிறப்பாகும்.

(6) தமக்குரிய பருவத்திலேயே ஒரு மரமானது கனியைத் தரும். இது புலப்படுத்தியுள்ள கருத்து:- எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் அவை நிறைவேறும் காலத்திலன்றி எக்கருமங்களும் நிறைவேறமாட்டாது.

(7) ஈரமில்லா — இரக்கமில்லாத
புல்லறிவாளர் — மூடர்
நீராம்பல் — அல்லி

---

**மறதி** ''இந்த மறதி என்கிற சக்தியினால் தான் மனிதன் உயிர் வாழ முடிகிறது. ஆளையே அமுக்கி விடக்கூடிய பல ஞாபகங்களை மனிதன் வெகு லேசாக மனத்திலிருந்து கழித்து விடுகிறான். வாழ்க்கை சாத்தியமாவதற்கு இதுதான் காரணமென்று சொல்ல வேண்டும். நாளை நாளை என்று ஒவ்வொரு நாளும் மனிதன் புதுத் துன்பங்களையும், இன்பங்களையும் ஏற்றுக் கொள்கிறான். நேற்றையது – இன்பமும் துன்பமும் – மறந்து விடுகிறது. அந்த மறந்து விடுகிற சக்தி படைக்காத மனிதன் என்றாவது ஒருநாள் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் போய் முடிய வேண்டியது தான்.''

— க. நா. சு.

*சிறுவயதிலேயே அறிவை வளர்க்கும் நாடு*

சிறுவர்களின் அறிவு வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தும் நாடு சோவியத் ரஷ்யாவாகவே இருந்தது. அங்கு வெளியிடப்படும் நூல்களில் மூன்றில் ஒரு பங்கு சிறுவர்களுக்கான நூல்கள் தானாம்! ஆண்டுதோறும் ஐம்பதுகோடி நூல்களைச் சிறுவர்களுக்காக அவர்கள் வெளியிடுகிறார்கள்.

● நேரமும், வாய்ப்பும் எல்லோருக்கும் எப்போதும் இருந்து கொண்டு தான் இருக்கின்றன. முயற்சி எடுப்பவர்கள் மட்டுமே அவற்றைப் பயன் படுத்தி வெற்றியடைகின்றனர். — ஜேம்ஸ்ஆலன்.

நன்றி: அறிவுக் களஞ்சியம் 19.

உ

# தேடிக் கண்டு கொண்டேன்!

''தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத்
தேவனை என்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன்.''

இந்தத் தேவாரத்தை அப்பர் சுவாமிகள் பாடுகிறார். கடவுளை எங்குந் தேடினார். ஒரு இடத்திலும் காணமுடியவில்லை. கடைசியாகத் தனது உள்ளத்துக்குள்ளேயே கடவுள் இருப்பதைக் கண்டு கொண்டார்.

*****

எண்பது வயதுப்பாட்டி, கண்ணாடி போடாத பாட்டி. இந்த வயதிலும் ஊசியிலே நூலைக் கோர்த்துக் கிழிந்த சீலையைத் தானே தைப்பார். ஒரு நாள் வீட்டுக்குள்ளே ஊசியைப் போட்டு விட்டார். குப்பி விளக்கை வைத்துத் தேடினார். ஊசி அகப்படவில்லை.

வீட்டுக்குள் இருந்து கொண்டே முற்றத்தைப் பார்த்தார். அன்று பூரணை தினம். பால்போல நிலவு எறித்தது. உடனே பாட்டி எழுந்து வந்து முற்றத்தில் இருந்து ஊசியைத் தேடினார்.

பேரப்பிள்ளை வந்தான். ''பாட்டி! பாட்டி'' என்ன தேடுகிறாய்?

''ஊசியைத் தேடுகிறேன்,"

''ஊசியை எங்கே போட்டாய் பாட்டி?"

''வீட்டுக்குள்ளே போட்டேன்."

''அப்படி என்றால் ஏன் முற்றத்தில் தேடுகிறாய்."

''முற்றத்தில் தானே வெளிச்சம் இருக்கிறது" என்றாள் பாட்டி. பேரன் பாட்டியின் மறுமொழியைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்தான்.

*****

எங்களுக்கும் சிரிப்புத்தான் வருகிறது.

ஆனால் நாங்களும் பாட்டியைப் போன்றவர்கள் தான்.

வீட்டுக்குள்ளே ஊசியை வைத்துக் கொண்டு பாட்டி முற்றத்திலே தேடினாள். நாமோ எமக்குள்ளேயே கடவுளை வைத்துக் கொண்டு உலகம் எல்லாம் தேடுகிறோம்.

நன்றி: மாணவருக்கேற்ற மாண்புறு கதைகள்.

# மாணவர்களுக்கு ஓர் அறிவுரை

( வ. சுப்பையாபிள்ளை )

சிறுவர்காள்!

உங்கள் தாய், தந்தையர்கள் தாம் மிக்க உழைப்பால் தேடிய பொருளை உங்கள் பொருட்டுச் செலவு செய்கின்றார்கள், எதற்காக வென்று கேட்பீர்களாயின்,

''தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தியிருப்பச் செயல்''

என்ற பொய்யா மொழிப்படி நீங்கள் திருந்திய அறிவைப் பெற்று அறிஞரது அவைகளில் உங்களுடைய கல்வியறிவொழுக்கங் களால் சிறந்த மதிப்படைய வேண்டுவதற்காகவல்லவா? உங்களிடத் தில் கல்வி நிரம்பிய அறிவைவிட, அறிவு நிரம்பிய ஒழுக்கமே சிறப் பாக விரும்பப்படுவது. கல்வி சிறப்பானது ஒழுக்கம் இல்லாவிடின் யாதொரு பயனையுங் கொடுக்கவல்லதன்று. எம். ஏ. பட்டம் பெற்ற புலவரும், யாழ் வாசிப்பில் சிறந்த புலவரும் கலைக்கூடத்தில் தேர்ந்தார் ஒருவரும் ஒழுக்கத்தைக் கருதாதவிடத்து ஒரே படியி லுள்ளவராகவே கருதப்படுவர். நூல்களோ புலனின்பம் தருவதோடு அமையாமல் உள்ளத்தையும் சீர்படுத்துவதால் தான் எழுமையும் தொடர்ந்து உறுதி பயக்கின்றன.

''ஒருமைக்கண் தான்கற்ற கல்வி யொருவர்க்கு
எழுமையு மேமாப் புடைத்து''

என்ற வள்ளுவர் வாய்மொழி இங்கு சிந்திக்கற்பாலது.

இத்தகைய சீரிய கல்வியைக் கற்கத் தலைப்பட்ட நீங்கள் கல் விச் சாலைகளில் செய்யத்தக்கவை யாவை? தமக்கு விதிக்கப்பட்ட பாடங்களை முறையே கற்று ஒப்புவித்து உங்கள் ஆசிரியர்களுடைய விருப்பத்தையும், உங்கள் தோழர்களுக்குள்ளே நன்மதிப்பையும் பெறவேண்டும். உங்களுடைய ஒய்வு நேரங்களில் நண்பர்களுடன் நல்ல உரையாடல்களைச் செய்து சொல்வன்மையைப் பெறுதல் வேண்டும். எங்காயினும் அறிஞர்களால் சொற்பொழிவுகள் நிகழ்த்தப் படுமாயின் அங்கே சென்று அமைதியுடனிருந்து அவற்றை மிக நுணுக்கமாகக் கேட்டு அறிவிற் பதித்துக்கொள்ளுதல் வேண்டும். வேண்டுமாயின் குறிப்புக்கள் எழுதிக்கொண்டு பின்னர் விரிவாக எழு தப்பழகலாம்.

''செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை'' என்பதும்,

''கேள்வி முயல்'' என்பதும்,

''கற்றலிற் கேட்டலே நன்று'' என்பதும்,

கருதற்பாலன, பல நூல்களையும் நுணுகியாராயுந் திறமை ஒவ்வொருவருக்கும் அமைதல் அருமை. ஒருவர் ஒரு நூலிலும் மற்றொருவர் மற்றொரு நூலிலும் புலமையுடையவராயிருப்பர். ஒரே நூலை இருவர் படித்தும் அதனைப் பற்றி பேசப்புகுவார்களாயின் இருவர்க்கும் கருத்து வேறுபாடு புலனாதல் தெளிவு. ஆதலால் ஒருவர் நமக்குத் தெரிந்த பொருளைப்பற்றியோ, தெரியாத பொருளைப் பற்றியோ பேசினாலும் நாம் அவையிரண்டையுங் கேட்க வேண்டுவது இன்றியமையாததாகும். சொற்பொழிவுகளைக் கேட்கக் கேட்கத் தான் பேசும் வன்மை ஏற்படும்.

அதுநிற்க, ஓய்வு நேரங்களில் உங்கள் தோழர்களோடு உடம்பு உரமுறத்தக்க விளையாட்டுக்களிற் செல்ல வேண்டும். தாயம் சீட்டு முதலிய சூதாட்டங்களில் ஒருபோதும் செல்லுதல் கூடாது. பந்தடித்தல், டென்னிஸ், ஓட்டம்' கிளித்தட்டு முதலிய விளையாட்டுக்களையே கொள்ளுதல் வேண்டும்.

இவற்றை விட்டு அயலான் தோப்புக்களிற் சென்று மாங்காய், தேங்காய் முதலியவற்றை அடித்து வீழ்த்தும் விளையாட்டு ஒருபோதும் கூடாது. அது விளையாட்டாகாது. அது திருட்டு' அப்பேர்ப்பட்ட பையனை யாராவது விரும்புவார்களா? உங்களுக்கிடையில் அவனிருப்பின் அவனோடு பழகுவீர்களா? அவனைத் தோட்டக்காரன் பிடித்து, உதைத்து சட்டத்தின்கண் அவன் தண்டிக்கப்படுவானானால் அப்போது அவாகளுடைய பெற்றோர் பட்டபாடும் போய் அவன் வாழ்நாளும் பயனற்றுப்போம்.

மேற்குறித்த தண்டனைக்குத் தப்பிக்கொள்வரேனும் பிறர் பொருளைப் பறிக்குந் தீச்செயலாகிய களவு அவனைப் பற்றிக்கொள்ளும்' நுணுக்கமான தீப்பொறியானது பெரியதோர் வைக்கோற்போ-ரில் மறைவாக இருந்து காற்றின் உதவி வாய்த்த பொழுது கனிந்து பற்றிச் சாம்பராக்குதல்போல் இச்சிறு களவு அவர்களுடைய பிற் காலத்தில் ஏற்ற சமயம் வாய்த்த பொழுது அவர்களைப் பாழாக்கி விடும். சிறிய துரும்புக்கும் அதற்குத்தக்க நிழல் அமைந்திருப்பது போல நல்வினை, தீவினையிரண்டும் மிகச் சிறியனவாயிருப்பினும் அவற்றின் பயனைக் காட்டாமற் போகாது. ஆதலால் அன்புடைய இளைஞர்களே உங்களுக்கு உரிமையில்லாத பொருளின் மேல் நாட்டம் வைக்காதீர்கள். அது காதற்ற ஊசியாயினும் உடையவனுடைய விருப்பமின்றி அதனைத் தொடாதீர்கள்.

பிறரொருவன் பொருளைக் களவாடலாமென்று உள்ளத்தால் நினைத்தலே தீதென்றும். களவு செய்யப்பட்ட பொருள் ஒருவனுக்குப் பயன்தருவதுபோற் தோன்றி ஒழிந்து விடுமென்றும் கூறிய வள்ளுவர் மொழிகள் சிந்திக்கத்தக்கவையாகும்.

''உள்ளத்தா லுள்ள லுந் தீதே பிறன் பொருளைக்
கள்ளத்தாற் கள்வோ மெனல்''

''களவினாலாகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும்''

ஒரு நன்னடையிற் சிறந்த பையனுடைய கதையைக் கேளுங்கள்.

ஓர் சிறிய பையன் ஓர் தோட்டத்தினருகே சென்றான். அத் தோட்டத்தில் நறுமணமிக்க மலர்கள் இருந்தன. அவன் நின்ற இடத்திருந்து வேலியினூடே கையை நீட்டி வேண்டிய மலர்களைப் பறித்துக் கொள்ளலாம். அச்சமயம் தோட்டத்திலும், புறத்திலும் அவனைப் பார்க்கக்கூடிய நிலையில் ஒருவருமில்லை. எனினும் கடவுள் ஒருவர் இருக்கிறார்; அவர் நமது செயல்களை எப்போதும் பார்த்துக் கொண்டே இருக்கிறார். என்று தனது தந்தையார் சொல்லிய அறிவுரை அவன் நினைவிற்கு வந்தது. ஆதலால் அவன் உடனே தோட்டத்திற்குள் சென்று ஓர் கிழவனைக் கண்டு அவனிடம் சிலமலர்களைக் கேட்டுப் பெற்றுக் கொண்டான். நேரான வழியிற் சென்றதனால், தான் கருதியதை நிறைவேற்றிக் கொண்டான். அத் தோட்டக்காரனுடைய நன்மதிப்பையும் பெற்றான். திருட்டுத்தொழிலால் ஏற்படும் அச்சத்தையுந் தவிர்த்து மனவமைதியுற்று மகிழ்வடைந்தான். அதுபோல நீங்களும் நல்லொழுக்கமுடையவராக வேண்டும். ஒழுக்கத்தை உயிரினுஞ் சிறப்பாகக் கருதுதல் வேண்டும். நல்லொழுக்கம் நன்றிக்கு வித்தாகும் என்பதையும் தீயொழுக்கம் என்றும் இடும்பை தருமென்பதையும், அறிந்து தீயொழுக்கம் விலக்கி நல்லொழுக்கத்திற் தலைசிறந்து விளங்க வேண்டும்.

''மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல் என்னுஞ் சொல்''

என்ற பொய்யிற்புலவர் புகழுரையின்படி இத்தகைய நல்ல மகனைப் பெறுவதற்கு இவனுடைய தந்தை என்ன தவம் செய்தானோ என்று யாவரும் எண்ணத்தக்க நல்லொழுக்கம் நிரம்பிய புகழுடைச் செல்வராக நீங்கள் விளங்கவேண்டும்.

## எமது நன்றிகள்

செந்தமிழ்ச் செல்வி நூலினை உதவிய தும்பளை, பருத்தித்துறை பண்டிதர் கிருஷ்ணபிள்ளை அவர்களுக்கு எமது உளப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

★ உலகம் முழுவதும் எல்லா இடத்திலும் எந்தவித தட்பவெப்ப நிலையிலும் வளரும் ஒரே உயிரினம் நமது நாய்தான்.

— நன்றி: நங்கூரம்.

ஸ்ரீ

# சிந்தனைக்கு சில சந்தான முத்துக்கள்

தொகுப்பு: செல்வா.

மகா சக்கரவர்த்தி அலக்சாண்டர் தனது கடைசி காலத்தில் ஆயிரக்கணக்கான வீரர்களை வைத்துக் கொண்டு "நான் இறந்த பிறகு பெரிய மரப்பெட்டியில் என் உடலை வைத்து மூடி ஆணி வைத்து அறைந்து கல்லறைக்கு தூக்கிச் செல்வீர்கள். அப்போது என் இரண்டு கைகளை மட்டும் மூடாமல் வெளியில் தெரியும்படி வைத்து நீங்கள் தூக்கிக் கொண்டு செல்ல வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டான். சரி அப்படியே செய்கிறோம் என்றார்கள் அவனது வீரர்கள்.

அப்போது ஒரு வீரன் எனக்கு ஒரு சந்தேகம் மன்னிக்கனும் கையைமட்டும் ஏன் வெளியில் வைக்கச் சொல்கிறீர்கள் என்று கேட்டான்.

நான் இந்த உலகத்திலே எத்தனையோ பேர்களை, போர்களை நடத்தினேன், எத்தனையோ வெற்றிகளைக் கண்டேன். புகழையும், கீர்த்தியையும், பொன்னையும், பொருளையும் சம்பாதித்தேன். கடைசியில் இந்த உலகத்தை விட்டுச் செல்லும்போது நான் ஒன்றுமே எடுத்துச் கொண்டு போகவில்லை என்று இந்த உலகத்திற்குத் தெரிய வேண்டும் என்பதற்காகத் தான்.

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவில் பிடிசாம்பலாய் வெந்து மண்ணாவர். உலகத்தை விட்டுச் செல்கிறபோது நாம் எதையுமே எடுத்துச் செல்ல முடியாது. நமது புகழும், ஈகையும், தர்மமும், நல்ல சிந்தனையும், உள்ளமும்தான் நிலைத்து நிற்கக் கூடியவை.

பிறருக்கு இயன்றவரை உதவி செய்து வாழ்வதுதான் மனிதனின் கடமை என்று அறிந்து அதன்படி புகழ் சேர்த்து வாழவேண்டும்.

மோசமாகவும், பழிபாவங்களுக்கு ஆளாகியும், கெட்டபெயர் வாங்கியும் வாழ்ந்த ஒருவன் இறந்தபிறகு அவன் உடலைப் புதைத்த இடத்தில் ஏற்கனவே நல்ல விளைச்சல் இருந்தாலும், இவனைப் புதைத்தபிறகு விளைச்சலே இல்லாமற் போகும் என்கிறார் வள்ளுவர்.

ஏ மனிதனே! உன்வாழ்க்கை முடிந்தபிறகு உன் உடம்பினைத் தாங்குகின்ற நிலத்தில் நல்ல விளைச்சல் விளையுமாறு நீ வாழக் கூடாதா என்பதே இங்கே சுட்டிக் காட்டப்படும் பெரிய உண்மையாகும்.

மகான்கள், ஞானிகள், முனிவர்கள் என்றெல்லாம் பெருமையாகப் பேசப்படுகின்ற அறவோர்கள் தவம்செய்து சமாதியாக நிறுவப் பெற்ற இடங்களில்தான் பெரிய பெரிய கோயில்களும், கோபுரங்களும் அமைந்துள்ளன என்ற உண்மையே இதற்கு இலக்கணம்

ஆகும். அறநெறியில் வாழ்ந்து தவம் செய்த மகான்கள் அடக்கமான நிலம் என்பதை உணர்த்துவதற்காகத்தான், அப்படியான இடங்களுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் சென்று வருகின்றனர்.

உலக மக்கள் பலராலும் விரிவாகப் பேசப்பட்டு தீய குணங்களோடு வாழ்ந்த ஒருவன் மறைந்தபிறகு அவனுடைய உடலைப் புதைத்த இடத்தில்தான் மதுக்கடைகளும் மாமிசக்கடைகளும் அமையப் பெறுகின்றன என்று கூறுவது மிகையாகாது.

''வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்''

இக் குறட்பாவின் கருத்தினை பன்முறை சிந்திக்க வேண்டும்.

பழிவாங்கலுடன் வாழ்ந்து இறந்த பிறகு அவன் சடலத்தைப் புதைத்த இடத்தில் ஒன்றும் விளையாது என்று சொல்வதோடு அவன் இருக்கின்ற இடத்திலே ஒன்றும் விளையாது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் ''யாக்கை'' பொறுத்த நிலம் என்று அமைத்துக் காட்டினார் வள்ளுவர்.

மனிதன் நல்லபடியாக வாழ்ந்து வரலாறு புகழத்தக்க முறையில் அவன் செயற்பட வேண்டும் என்று பெரியோர்கள் சொல்வார்கள். அவர்கள் வரையறுத்த நெறிமுறையைப் பின்பற்றி வாழ்வை அமைத்தால் மனிதன் மனிதனாக வாழலாம். அவன் வாழ்வும் மற்றவர்க்கு உதாரணமாகத் திகழலாம்.

## எலியைச் சுட முடியாத தளபதி!

இத்தாலியிலுள்ள கெஸட்டா என்ற இடத்தில் 1943 ம்ஆண்டு ஒரு இராணுவ முகாம் போடப்பட்டிருந்தது. அதிலுள்ள அறை ஒன்றில் எலி ஒன்று அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தது. அதன் தொல்லையால் அங்கிருந்த அதிகாரி துன்பப்பட்டார். அதிகாரியின் பொறுமையை அந்த எலி சோதித்தது.

துள்ளி எழுந்த, அதிகாரி தனது துப்பாக்கியினால் எலியைச் சுட்டார். எலி சூடு படாது தப்பி விட்டது. எலியைச் சுட்டு வீழ்த்துவதில் அதிகாரி படு தோல்வி கண்டார். அவரது சமையற்காரன் ஓடிச் சென்று ஒரு விறகு கட்டையை எடுத்து வந்து எலியை ஒரே அடியில் அடித்துக் கொன்று விட்டான்;

இவ்வாறு ஓர் எலியைச் சுட்டு வீழ்த்த இயலாத அந்த இராணுவத்தளபதி யார் தெரியுமா?

அவர் தான் இரண்டாவது உலக மகாயுத்தத்தில் முழு உலகையும் ஒரு கலக்குக் கலக்கிய ஜெனரல் ஐஸன் ஹோவர்-முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி.

— சிவா.

நன்றி: அறிவுக் களஞ்சியம் 18.

ங

# நிறுவனரின் சிந்தனை:

எமது பழைய தமிழ்ச் சமுதாயத்தில் ஞானமேதாவிகள், முனிவர்கள், நாயன்மார்கள் வகுத்துத் தந்த அறநெறி முறைகளில் எழுத்துக்கல்வி முறைகளைப் பயிற்றுவித்த ஆசிரியரான குருவுக்கு வந்தனம் செலுத்துவது முதலிடம் பெறுகின்றது. இந்த நன்றியறிதலை சிந்திக்கும் வகையில் தமிழ் எண்களில் மூன்று எண்ணைக் குறிப்பிடும் எழுத்தான ''ங'' எழுதியே விசயத்தை தொடர்கின்றனர். இக்குறியீடு ஒவ்வொருவருக்கும் கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியரது நன்றியுணர்வை பாராட்டுவதாய் அமைகின்றது. எனவே மாணவர்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் குருவை மதிக்கும் வகையில் ''ங'' இதை எழுதி தமிழ்ச் சமுதாயம் வளர உதவுவது எமது தலையாய கடமையாகும். எதிர்கால விஞ்ஞானிகளான சிறுவர்களும் தமது குருவை மதித்து நடப்பது தமது வாழ்வை வளம்படுத்தும் என்பதை அன்புடன் அறியத் தருகின்றோம்.

பாலர்கள் சிறுவயதிலேயே நல்ல எழுத்தை எழுதப் பழகுவதன் மூலம் அவர்கள் வாழ்க்கை மேம்பாடடையும் என்பது எமது அனுபவமாகும். எனவே உங்கள் எழுத்தை அழகாகவும், உறுப்பாகவும் எழுத முயற்சியுங்கள். அதற்காக உங்களை அர்ப்பணியுங்கள். உங்கள் குருவிற்கு ஒத்துழைப்பை நல்குங்கள் என அன்பாக வேண்டுகின்றோம். சமுதாய வளர்ச்சிக்கு தொழில்வளம் பெருக சிறுபராய எழுத்து மூலம் ஏற்படும் கைவளம் மிக முக்கியமாய் அமைகின்றது. இவ்வாறு ஏற்பட்ட கைவளத்தின் மூலம் யப்பானிய மக்கள் தினமும் ஒவ்வொருவிதமான சாதனை படைத்து வருகிறார்கள். வெளிச்சமில்லாமலே ஒருவர் தனது புத்தகத்தை வாசிக்கக் கூடிய மூக்குக் கண்ணாடியையும் உருவாக்கியுள்ளனர்.

இளம்பராயத்தில் கைவளம்மூலம் பெற்ற அனுபவத்தைக் கொண்டு (கைவளம்என்பது முதல் எழுதும் எழுத்திலிருந்து ஆரம்பமாகின்றது)

தெய்வப்புலவர் திருவள்ளுவர் முதுமையடைந்ததும் மக்களுக்கு பணி செய்ய வேண்டுமென்ற பெருவிருப்போடு வேறு எவரது உதவியும் இன்றி அறநெறிச் செயல் மூலம் அறிவுக் களஞ்சியமான குறளை இயற்றியுள்ளார்.

இவ்விடத்தில் குறள்நெறி வாழ்க்கைக்கு முன்னுதாரணமாக விளங்கிய எமது இளம்பராய வாழ்க்கையின் சில சம்பவங்களைத் தர முற்படுகின்றோம்.

நாம் பாடசாலையில் கல்விபயின்ற காலத்தில், அதாவது எமது ஒன்பதாவது வயதில் பேச்சுப் போட்டியில் முதற்பரிசாக ஒரு திருக்குறளைத் தந்தார்கள். அக்காலத்தில் திருக்குறளை விலையாக 25 சதம் கொடுத்து வாங்கக்கூடிய பொருளாதார வசதி எம்மிடம்

இருக்கவில்லை. அத்திருக்குறளில் கூறப்பட்ட நெறிமுறைகளின் பிரகாரம் நாமும் ஒருசிறிது செயற்படத் தொடங்கினோம். எமது பதினைந்தாவது வயதில் நாம் பாடசாலையைவிட்டு விலகும்போது எமக்கு அனேக பரிசில்கள் தந்துள்ளார்கள். திருக்குறளில் கூறப்பட்ட முறையில் எமது வாழ்க்கையை வடிவமைப்பதற்கு பெரும் பிரயத்தனப்பட்டுள்ளோம். அத்திருக்குறள் நெறிமுறையில் ஒழுகிய காரணத்தினாலேயே, அத்திருக்குறளை இருபத்தைந்து சதத்துக்கு வாங்க முடியாத வசதியற்றவனான நாம் உண்மை வழியில் செயற்பட்டமையினால் தான் சிறிது சிறிதாக முன்னேறி பொருளாதாரத்தில் படிப்படியாக வளர்ச்சி கண்டு இன்று இச்சஞ்சிகையை உங்கள் கையில் தரக்கூடிய சக்தியைப் பெற்றுள்ளோம். அன்று அத்திருக்குறள் கிடைத்து அதன் பேறாக நன்நெறியைக் கடைப்பிடித்து முன்னேறிய காரணத்தினால் இவ்வெளியீட்டை வெளியிட வேண்டிய கடப்பாடு அதிகமாக உள்ளது. நாம் எமது சிறுபராயத்தில் திருக்குறளைக் கற்றமையினால் தான் உடல் உழைப்பு மூலம் தொழில்துறையில் வளர்ச்சி கண்டு சிக்கனம் - சமத்துவம் பேணி உயர்நிலை அடைய வாய்ப்பேற்பட்டது.

எனவே சிறுவர்களாகிய நீங்களும் அறநெறியைப் பின்பற்றி குறள்நெறியைக் கைக்கொண்டு உங்கள் வாழ்க்கையில் முன்னேறுமாறு அன்போடும், பண்போடும், பணிவோடும் இருகரம் கூப்பி வேண்டுகிறோம்.

— நிறுவனர்.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

## தெலுங்கில் திருக்குறள்

உலகிலேயே மிக அதிகமாக மொழி பெயர்க்கப்பட்ட தமிழ் நூல் என்ற பெருமைக்குரியது திருக்குறள். தெலுங்கில் இதை மொழிபெயர்தவர், பூதலப்பட்டு ஸ்ரீராமுலுரெட்டி என்பவர். மொழி பெயர்க்கத் தூண்டியது எது தெரியுமா? ஒரு புத்தாண்டு நாட் குறிப்பேடு! *(Diary)*. சென்னையிலுள்ள கடையொன்றில் இவர் வாங்கிய நாட்குறிப்பேட்டிலே ஒவ்வொரு பக்கத்திலும் ஒரு திருக்குறள் அழகாக அச்சிடப்பட்டிருப்பதைக் கண்டார். ஒரே மூச்சிலேயே எல்லாக் குறள்களையும் வாசித்து முடித்தார். நன்கு தமிழ் தெரிந்த அவருக்குக் குறளின்கருத்துக்கள் தெளிவாக விளங்கின; அவை அவரை மிகவும் கவர்ந்தன. திருக்குறள் மூல நூலை வாங்கினார்; முழுவதையும் படித்தார். அந்த அரும்பெரும் கருத்துக் கருவூலம் தன் மக்களுக்கும் பயன்பட வேண்டும் என்றும் விரும்பினார். திருக்குறளின் தெலுங்கு மொழி பெயர்ப்பு உருவாகியது!

— சராசரன்.

நன்றி:- அறிவுக் களஞ்சியம்— 19

ஸ—

எமது வெளியீடுகளை
பின்வரும் விலாசங்களில்
பெற்றுக் கொள்ளலாம்.

★ பாஷையூர்புனிதஅந்தோனியார்
மக்கள் முன்னேற்ற ச. ச. நி.

★ சி. சி. வரதராசா
- கொழும்புத்துறை.

★ சிவ. ஆறுமுகசாமி
- கோணாவளை கிழக்கு,
கொக்குவில்.

★ வழி-கலை இலக்கிய வட்டம்
- சுன்னாகம்.

★ அஷ்டலட்சுமி கலண்டர் நிறுவ.
- கண்டி றோட், கைதடி.

★ அன்னை மருந்தகம்
- பருத்தித்துறை.

★ S. K. சாமி — நெல்லியடி.

★ கலைச்சோலை
- வல்வெட்டித்துறை.

★ அபிராமி மருந்தகம் - நீர்வேலி.

★ சின்னையா ஸ்ரோர்ஸ்
- கொடிகாமம்.

★ சிவம் மருந்தகம்
- சாவகச்சேரி.

★ சூரியா பார்மசி - புத்தூர்.

★ ரி. வி. பாலா புத்தகசாலை
- இணுவில்.

இவ் வெளியீடு புலோலி மேற்கு விநாயகர் தரும நிதியத்திற்காக விநாயகர் தரும நிதிய அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.